பொதுசன நூலகம்.
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

SATS-TECH ENGINEERS

NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 01 சனிக்கிழமை (14.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

# ஜனாதிபதி மகிந்த -ஹிலாரி கிளின்டன் தொலைபேசியில் நீண்ட நேரம் பேச்சு



## இலங்கை விவகாரம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனும் தொலைபேசியில் நீண்டநேரம் உரையாடியுள்ளனர். இவ்வுரையாடல் நேற்றுமாலை இடம்பெற்றதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)



# வான் மற்றும் ஷெல் தாக்குதல்களில் வன்னியில் 57 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வன்னியில் கடந்த 11,12ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட எறிகணை மற்றும் வான் தாக்குதல்களில் 57 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர்.

...ளில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

உணவுப் பொருட்களை ஏற்றிய கப்பலில் வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் படகின் மூலம் நேற்று முன்தினம்

...விக்கப்படுகிறது.

இதில் சம்பவ இடத்தில், இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த 5 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 25 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் மருத்துவ

## கப்பல் சேவை நாளை இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் சேவை நாளை இடம்பெறும் என யாழ்.சிவில் நிர்வாக காரியாலய அலுவலகர் அருணசிறி தெரிவித்துள்ளார்.

இக் கப்பல் சேவையில் பயணத்தை மேற்கொள்வதற்கு தம்மைப் பதிவு செய்து கொண்

# வன்னியில் 57 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வன்னியில் கடந்த 11,12ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட எறிகணை மற்றும் வான் தாக்குதல்களில் 57 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர்.

இதில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 32 பேர் உயிரிழந்துள்ளதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர்.

உணவுப் பொருட்களை ஏற்றிய கப்பலில் வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் படகின் மூலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கரையோரத்திற்கு வந்தபோது இவ் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் சம்பவ இடத்தில், இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த 5 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 25 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர்.

க.நாதன் (வயது 44), தி.மேரிதியாகினி (வயது 14), (12 ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை நாளை இடம்பெறும் என யாழ்.சிவில் நிர்வாக காரியாலய அலுவலகர் அருணசிறி தெரிவித்துள்ளார்.

இக் கப்பல் சேவையில் பயணத்தை மேற்கொள்வதற்கு தம்மைப் பதிவு செய்து கொண்டவர்கள் அன்று காலை 7.30 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் ஒன்று கூடுமாறும் அவர் கூறினார். (எ-5)

# புதுமாத்தளன் வைத்தியசாலை மீது நேற்று மாலை ஷெல் தாக்குதல்

## 31 பேர் உயிரிழப்பு

(வவுனியா)

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள புதுமாத்தளன் வைத்தியசாலை மீது நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்ட ஆட்லெறித்தாக்குதலில் ஏற்கனவே காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நான்கு பேர் திரும்பவும் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் நேற்று மாலை 4.10 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் முரளிதரனின் அலுவலகம் மீது சம்மாந்துறையில் தாக்குதல்

## நால்வர் பலி

(கொழும்பு)

சம்மாந்துறை, சொறிக்கல்முனையில் அமைந்துள்ள அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா அம்மான்) காரியாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது அங்கிருந்த நால்வர் கொல்லப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகமாக இதுவரை இயங்கி வந்த இந்தப் பணிமனை தற்போது அமைச்சர் முரளிதரனின் காரியாலயமாகச் செயற்படுகிறது.

நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

# தாதியர் குழுவினர் திருமலை பயணம்

(கொழும்பு)

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ளவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்கென மேலும் ஒரு தொண்டர் தாதியர் குழு நேற்று புறப்பட்டுச் சென்றது.

அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்குப் பிரதேசத்துக்கு இத்துடன் ஆறாவது கட்டமாக தாதியர்கள் அனுப்பி வைக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களின் உயிரிழப்பு அதிர்ச்சி ஏற்படுத்துகிறது

## நவநீதம்பிள்ளை கவலை



(லண்டன்)

இலங்கையின் வடக்கே போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் போர்க்காலக் குற்றங்களாகும். இவ் இரு தரப்பினரும் உடனடியாக போர் நிறுத்தம் மேற்கொள்ளவேண்டும் என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் (12 ஆம் பக்கம் பார்க்க)




சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம் unicef


# பிரி.நிழல் பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதியுடன் நேற்றுச் சந்திப்பு!

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானியாவின் நிழல் பாதுகாப்புச் செயலாளர் டாக்டர் லியம் பொக்ஸ் நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம; அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் (12 ஆம் பக்கம் பார்க்க)


இன்று முதல் வாடிக்கையாளர்களின் நலன் கருதி

4R-10 /= மட்டுமே

மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். பிரதான வீதி, நெல்லியடி.



கொழும்பிலிருந்து ஏ-9 பாதையூடாக நாவற்குழி அரச களஞ்சியத்தை வந்தடைந்த பொருட்களை யாழ். அரச அதிபர் க.கணேஷ் கையேற்பதையும் அவரின் முன்னிலையில் பொருட்கள் இறக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# ஈழத்தமிழருக்கு இந்தியா உதவவில்லை; மலேசிய எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கோலாலம்பூர்)

இலங்கை தமிழருக்கு இந்தியா உதவவில்லை என மலேசிய எதிர்க்கட்சியான ஜன நாயக செயல்கட்சியின் தலைவர் கர்ப்பால் சிங் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அண்மையில் பினாங்கு மாநிலத்தில் ஈழத் தமிழர்களுக்காக நடத்தப்பட்ட நிதி திரட்டும் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இடம் பெற்று வரும் இனப் படுகொலையைக் கண்டிக்காத உலக நாடுகளைக் குறிப்பாக இந்தியாவை கர்ப்பால் கடுமையாகக் சாடினார்.

தமிழக முதல்வர் மு.கருணாநிதி எங்கே போய்விட்டார், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எங்கே போய்விட்டார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் படுகொலையை தடுக்காத இந்த இருவரும் உலகத் தமிழர்களிடம் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்று வரும் இன வெறியாட்டத்தைக் கண்டிக்கக் கூடத் தயங்கும் இந்தியாவை நினைத்து வேதனையடைவதாக அவர் குறிப்பிட்டார்.

பிடல் காஸ்ரோவை தீவிரவாதி என்று கூறிய அதே உலகம்தான் இன்று அவரை தேசியவாதி என்று போற்றுகிறது.

பிரபாகரனையும் நாளைய சரித்திரம் போராட்டவாதி எனவும் தேசியவாதி எனவும் போற்றுமே தவிர தீவிரவாதி என்று ஒருபோதும் கூறாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இன்று ஈழத்தமிழர் இன்னல் துடைக்க ஒன்று சேர்ந்துள்ள நாம், அள்ளி கொடுக்கா விட்டாலும் கிள்ளியாவது கொடுப்போம் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-1)

## கண்ணி வெடி அகற்றுவதற்கான உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கான உடன்படிக் கையொன்றில் ஜப்பானுடன் இலங்கை நேற்றுக் கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கை ஜப்பான் தூதரகத்தில் நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டது.

இதன் போது ஜப்பான் தூதரகத்தின் விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரியான கௌரு சிமசகின் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான சுவிற்சர்லாந்து அமைப்பின் பிரதிநிதி மார்க் போனே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஜப்பான் 80 மில்லியன் ரூபாயை இலங்கைக்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-3)

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு மேயில் பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கலைமாணிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கே பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

பட்டமளிப்புக்கு தகுதி பெற்றுள்ளோர் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழக தொலைத் தொடர்புக் கல்வி நிலையத்தில் தம்மைபதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பம், பெறுபேற்றுச் சான்றிதழ் உடன் உரியவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

# பிறந்த சிலமணி நேரத்தில் நாய்களுக்கு இரையான குழந்தை

(சென்னை)

திருவண்ணாமலை நகரில் திருவள்ளுவர் சிலையருகே நேற்றுக் காலை 8.30 மணியளவில் குப்பை மேட்டின் அருகே ஒரு சாக்குபை அநாதையாகக் கிடந்தது.

அதன் மேலிருந்த இரத்த வாசனையை முகர்ந்து கொண்டு, கும்பலாக போன தெரு நாய்கள் அங்கிருந்த ஏதோ ஒன்றை பிய்த்து தின்று கொண்டிருந்தன.

நாற்றத்தை தாங்க முடியாத மக்கள் பயந்து போயினர். அதன் அருகே போய் நாய்களை துரத்திவிட்டு பார்த்த போது பிறந்து சில மணி நேரங்களே ஆன பச்சிளம் ஆண் குழந்தை நாய்களின் குதறலால் சின்னா பின்னமாகி இறந்து கிடந்தது.

அந்த காட்சியை கண்டு கண்ணீர் விட்ட சிலர், உடனே பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

பொலிஸார் வந்து நகராட்சி துப்புரவு பணியாளர்கள் உதவியோடு அந்த குழந்தையின் எஞ்சிய பாகங்களை அடக்கம் செய்தனர். (எ-1)

## தமிழ்த்தின போட்டிக்கு செல்லும் மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 21,22ஆம் திகதிகளில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் நாளை தென்பகுதிக்கு செல்வதற்கான பயண ஏற்பாடுகள் யாழ்.அரச அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே மாணவர்களை நாளை காலை 7.30 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்திற்கு சமுகம் தருமாறு வலிகாமம் வலயக்கல்வி.ப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

## தபால் பொதிகள் திருமலையில் தேக்கம்

யாழ்ப்பாணத்துக்கான 410 தபால் பொதிகள் திருகோணமலையில் தேங்கிக் கிடப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. காங்கேசன் துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான கப்பல் போக்குவரத்து கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப் படாமையினால் 2 வாரங் களுக்கான தபால் பொதிகள் தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுருவினால் யாழ்.அரச அதிபர் க.கணேஷுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கான தபால்பொதிகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் ஊடாக அனுப்ப யாழ். அரச அதிபரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

# கப்பம் கோரி கடத்தப்பட்ட சிறுமி சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை பாலையூற்றுப் பிரதேசத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 6 வயது சிறுமி நேற்று முற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சென்.மேரிஸ் கல்லூரியில் கல்வி கற்கும் யூட்றெஜிவர்சா என்ற மாணவியே கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டவராவார்.

திருகோணமலை புதிய சோனகதெரு வீதியிலிருந்து இவரின் சடலம் மீட்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மில்லியன் ரூபாய் கப்பம் கோரி கடத்திச் செல்லப்பட்ட நிலையிலேயே இந்த சிறுமி கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் துறைப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுமி கடந்த 11ம் திகதி பாடசாலையிலிருந்து கடத்திச் செல்லப்பட்டிருந்தார். இதே வேளை இச்சிறுமியின் கடத்தல் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-5,14)

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு 39 ஆயிரம் மக்கள் வருகை

## அரசாங்கம் தெரிவிப்பு

விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு பெப்ரவரி 17ம் திகதியிலிருந்து இதுவரை 750 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இந்த உணவுப் பொருட்கள் கடல் மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து இதுவரை 39 ஆயிரத்து 324 பேர் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

விடுவிக்கப்படாத பகு திகளிலிருந்து 2 ஆயிரத்து 224 நோயாளர்கள் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 6ஆம் திகதி வரை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளனர். இந்த நோயாளர்கள் 6 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-5)

# லயன்ஸ் கழக ஒன்றுகூடல்

(கரவெட்டி)

வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள வறிய மாணவர்களுடனும் முதியோர்களுடனும் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 3 மணிவரை யாழ்.லயன்ஸ் கழக உறுப்பினர்கள் ஒன்றுகூடல் நிகழ் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இதன்போது இந்து மகளிர் பாடசாலை, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.இந்துக்கல்லூரி, வேம்படிமகளிர் கல்லூரி ஆகிய பாடசாலை லியோக்கழக மாணவர்களும் சொண்ட் நிறுவன உத்தியோகத்தர்களும் இணைந்து பல பயனுள்ள செயற் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே இவ் ஒன்றுகூடலில் சகல யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயத் தலைவர் ப.செந்தில் செல்வன் கேட்டுக்கொண்டுள்ளார். இந் நிகழ்வு வருடாவருடம் நடை பெற்று வரும் நிகழ் வென்பது குறிப்பிடத்தக்கது. (ச-14)

# இன்று ஒரு தகவல்

## இன்பம் எங்கே?

ஒருவன் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அதற்கு என்ன வழி என்று நான்கு பேரிடம் யோசனை கேட்டான்.

"பணம் இருந்தால் மகிழ்ச்சி தானாக வரும். அதனால் பணம் சம்பாதிக்கும் வழியைப் பார். அதன்பின் நீ தேடிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சி உன்னைத் தேடி வந்து சேரும்" என்றார்கள்.

அப்படியானால் மகிழ்ச்சி இருக்குமிடம் பணம் தான் என்று முடிவு செய்து அதைச் சேர்க்க ஆரம்பித்தான். சிறிது காலத்திலேயே பெரிய ஆளாகிவிட்டான். செல்வம் நிறைய சேர்ந்து விட்டது. இப்பொழுதும் அவனுக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லை. மறுபடியும் நண்பர்களிடம் யோசனை கேட்டான்.

"பணம் சேர்த்தால் மட்டும் இன்பம் வந்துவிடாது. அதை செலவு செய். பணம் மூலமாக இன்பத்தைத் தேடு. மகிழ்ச்சி கிடைக்கும்" என்றார்கள்.

உடனே அந்தப் பணத்தையெல்லாம் எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு போனார். சுற்றிப் பார்த்தான். விருப்பமானவற்றையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டுப் பார்த்தான். மது, போதைப் பழக்கத்தில் எல்லாம் ஈடுபட்டுப் பார்த்தான்.

திருமணம் செய்து கொண்டான். குடும்பம் நடத்தினான். எப்படி இருந்தாலும் அவன் எதிர்பார்க்கும் மகிழ்ச்சி அவனுக்குக் கிடைக்கவில்லை.

அதனால் மகிழ்ச்சி என்பது எங்கே இருக்கிறது என்ற இரகசியத்தை அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

கடைசியாக ஒரு பெரியவரிடம் யோசனை கேட்டான்.

அதற்கு அவர், "இல்லறத்திலும் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லையானால் துறவறத்தில் தான் அது கிடைக்கும் என்று நினைக்கிறேன்" என்றார்.

"சரி... அதையும் தான் முயற்சி பண்ணிப் பார்ப்போமே" என்று முடிவு செய்தான்.

வீட்டிலிருந்த நகை, பணம், பவுண், வைரம், வைடூரியம், எல்லாவற்றையும் ஒரு மூட்டையாக கட்டி எடுத்துக் கொண்டான். ஒரு யோகியைத் தேடிப் போனான். அவர் காலடியில் கொண்டு போய் வைத்தான்.

அவர் நிமிர்ந்து பார்த்தார். "இதெல்லாம் என்ன" என்றார்.

"இதெல்லாம் இனிமேல் எனக்குத் தேவையில்லை!" என்றான்.

"சரி... அப்படியானால் உனக்கு என்ன தேவை?" என்றார்.

"எனக்கு மகிழ்ச்சி தேவை – மன அமைதி தேவை" என்றான்.

அந்த யோகி தன் காலடியில் இருந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்தார். உள்ளே தங்கம், வைரம், நகை, பணம் எல்லாம் இருந்தது.

அவசரமாக அதைச் சுருட்டி எடுத்துக் கொண்டார். தலையில் வைத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்தார்.

இவனுக்கு அதிர்ச்சி...

"அடடா... இவர் போலிச்சாமி போலிருக்கிறதே... ஏமாந்து விட்டோமே" என்று நினைத்தான்.

வருத்தப்பட்டான். அந்தத் துக்கம் ஆத்திரமாக மாறியது. உடனே அந்த யோகியைத் துரத்த ஆரம்பித்தான்.

அவர் ஒரே ஓட்டம். சந்து பொந்தெல்லாம் நுழைந்து ஓடுகிறார். இவனும் விடாமல் துரத்துகிறான். கடைசியாக அந்த யோகி மூச்சு இரைக்க இரைக்க புறப்பட்ட இடத்தில் வந்து நின்றார்.

துரத்திக் கொண்டு வந்தாலும் ஓடிவந்து நின்றான். இப்பொழுது அந்த யோகி சொன்னார்.

"என்ன பயந்து விட்டாயா? இந்தா உன்னுடைய செல்வம். நீயே வைத்துக்கொள்" என்று மூட்டையைத் திருப்பிக் கொடுத்தார். கைவிட்டுப் போன தங்கமும், வைரமும், பணமும் திரும்பக் கிடைத்து விட்டது என்பதில் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி.

மறுபடியும் அந்த யோகி சொல்கிறார்.

"இங்கே நீ வருவதற்கு முன்பு கூட இந்தத் தங்கமும் வைரமும் உன்னிடம் தான் இருந்தது.

ஆனால், அப்பொழுது உனக்கு மகிழ்ச்சி இல்லை. இப்பொழுது உன்னிடம் இருப்பதும் அதே தங்கமும் வைரமும் தான். ஆனால் இப்பொழுது மனதில் மகிழ்ச்சி இருக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மகிழ்ச்சி என்பது வெளியில் இல்லை. உள்ளேயே இருக்கிறது. அது நம் மனதில் இருக்கிறது. இதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

நம்ம ஆள் ஒருவன் பணம், நகை எல்லாவற்றையும் ஒரு மூட்டையில் கட்டி எடுத்துக் கொண்டுவந்து ஒருவர் காலடியில் வைத்தான்.

"இது எனக்குத் தேவையில்லை" என்றான்.

"உனக்கு என்ன தான் தேவை?" என்றார் அவர்.

"எனக்கு மன அமைதி தேவை!" என்றான்.

"உனக்கு மன அமைதி தேவைப்படும் அளவுக்கு இப்பொழுது என்ன நடந்தது?" என்றார் அவர்.

"வேறொன்றுமில்லை. இந்த பணத்தையும் நகையையும் நான் யார் வீட்டில் எடுத்தேனோ அந்த வீட்டுக்காரர்கள் இப்பொழுது என் பின்னால் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அவ்வளவுதான்!" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பாடசாலை தவணைப் பரீட்சை தொடர்பாக நாடளாவிய ரீதியில் பொதுவான செயற்திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் இந்த வருடத்திற்கான தவணைப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாக நாடளாவிய ரீதியில் பொதுவான செயற்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய கல்வி சீர்திருத்த செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தையும் பொதுப் பரீட்சைகளையும் ஒன்றிணைத்து மாணவர்களின் அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்யும் நோக்கத்துடன் பொதுவான செயற்திட்டத்தை பின்பற்றவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிமால் பண்டார வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்த வருடத்திற்கான முதலாம் தவணைப் பரீட்சை பாடசாலை மட்டத்தில் அதிபரின் பொறுப்பின் கீழ் நடாத்தப்படவுள்ளதுடன் இரண்டாம் தவணைப் பரீட்சை வலயக்கல்வி அலுவலகங்களினால் நடத்தப்படவுள்ளன. மூன்றாம் தவணைப் பரீட்சை சம்பந்தப்பட்ட மாகாண கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான இறுதி தவணைப் பரீட்சை புதிய பாடத் திட்டத்தின் கல்வி பொதுத்தராதர சாதாரண பரீட்சை வினாத்தாளின் மாதிரிக்கு அமைவாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III நியமனம் பெறுவோர் விபரம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிருவாக சேவை வகுப்பு III இல் இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கான 23.03.2009 முதல் இச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு பொதுச் சேவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

நியமனக் கடிதங்கள் நேரடியாக உரியவர்களுக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவால் அனுப்பி வைக்கப்படும்.

சித்தியெய்தியோரின் பெயர் மற்றும் அவர்கள் பெற்ற புள்ளி ஆகிய விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

**திறந்த போட்டிப் பரீட்சை**

**பொது**

எஸ். பிரசாந்தன் - 293, ரி. ஏ.ஏ. தமயந்தி - 279, எஸ். பிரபா - 279, எஸ். அபிராமி - 277, ஜி.டி. தேவராஜா - 275, கே. மணி மாறகன் - 271, ரி. முகுந்தன் - 262, யு. சிவாநந்தன் - 261.

**தகவல் தொழில்நுட்பம்**

எஸ். புவனேந்திரன் - 232.

**கணிதம்**

ரி. லெனின் அறிவழங்கன் - 280.

**வர்த்தகம்**

எஸ். தாட்சாயினி - 268, கே. செல்வன் - 261.

**விவசாயம்**

வி. வல்லிபுரம் - 258.

**மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை**

**ஆங்கிலம்**

டி. எஸ். என். கல்யாணி - 173, ஜெ. என். சில்விஸ்ரர் - 173.


**விஞ்ஞானம்**

கே. ஏ. சிவனருள்ராஜா - 179.

**கணிதம்**

ஏ. சிவகுரு - 178.

(ஓ-5)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளையில் நடைபெற்ற மகளிர் தின நிகழ்வுகளில் வனிதா வாசனா சேமிப்பு சான்றிதழை வங்கியின் வாடிக்கையாளர் திருமதி. வனிதா ஞானச்சந்திரனுக்கு வங்கி உதவி முகாமையாளர் திருமதி. ஸ்ரீகாந்தநிர்மலா விமலேந்திரன் வழங்குவதையும், முகாமையாளர் பி. கிருஷ்ணானந்தன் பிரதி முகாமையாளர் ச. சர்வானந்தன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

14.03.2009
(பங்குனி 1, சனிக்கிழமை)
திருதியை முற்பகல் 7.04 மணிவரை
சித்திரை முற்பகல் 8.56 மணிவரை
இராகுகாலம் 9.21-10.51 மணிவரை
சுபநேரம் 3.21-4.51 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்
காரடையா நோன்பு

| | |
|---|---|
| மேடம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, போசன சுகம், தொழில் முன்னேற்றம், தேகநலன். |
| இடபம் | சத்துரு ஜெயம், ஆரோக்கியம், சுவாரஸ்யம் முயற்சி கைகூடும். |
| மிதுனம் | உடல் நலக்குறைவு, குடும்பக் கவலை, பணக்குறைவு, நிலை மாற்றம். |
| கடகம் | பிரயாண சுகம், முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு, புதிய தகவல். |
| சிங்கம் | அந்நியர் சந்திப்பு, போசன சுகம், காரியநன்மை, சகோதரர் உதவி. |
| கன்னி | அமைதிக்குறைவு, காரியதடங்கல், பணவிரயம், திடீர் நன்மை. |
| துலாம் | சிந்தனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், தொழில் முயற்சி. |
| விருச்சிகம் | உறவினர் மனஸ்தாபம், திடீர் பயணம், சுபசெலவு, சயன சுகக் குறைவு. |
| தனுசு | குடும்ப மகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், பொருள் சேர்க்கை, தேகநலன். |
| மகரம் | கடின உழைப்பு, இனிய செய்தி, எடுத்த காரியம் கைகூடும், நண்பர்கள் உதவி. |
| கும்பம் | தந்தை வழி உறவு, வீண் செலவு, பிரயாணம், முயற்சி தாமதம். |
| மீனம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசனசுகம், உடல் நலக்குறைவு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 40 | 60 |
| அவரை | 20 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 50 | 50 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 20 | 30 |
| வாழைக்காய் | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 25 | 35-40 |
| பெரிய வெங்காயம் | 30 | 50 |
| பாகற்காய் | 40 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 20 | 35 |
| புயிற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 |
| போஞ்சி | 30 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30-35 |

# விசேட விடுமுறை அனுமதி

(அல்வாய்)

கடந்த வருடம் வட மாகாணத்தின் கீழ் பின்வரும் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அம்மாவட்டங்களின் மாகாண பொதுச் சேவை அலுவலர்கள் குறிப்பிட்ட தினங்களில் கடமைக்கு சமூகமளிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் குறித்த தினங்களில் வெள்ளப் பெருக்கு காரணமாக அலுவலர்களால் பெறப்பட்ட விடுமுறைகளை விசேட விடுமுறைகளாக அனுமதிக்க வட மாகாண கௌரவ ஆளுநர் 2009.01.07 ஆம் திகதிய கடிதம் மூலம் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 2008.11.26 ஆம் திகதி முதல் 2008.12.01 ஆம் திகதி வரையும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2008.11.23 ஆம் திகதி முதல் 2008.11.28 ஆம் திகதி வரையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2008.11.22 ஆம் திகதி முதல் 2008.11.28 ஆம் திகதி வரையும், மன்னார் மாவட்டத்தில் 2008.11.26 ஆம் திகதி மட்டும் விசேட விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய திணைக்களத்தின் கீழ் அம்மாவட்டங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மேற் குறிப்பிட்ட தினங்களில் வெள்ளப் பெருக்குக் காரணமாக அறிக்கையிடாத அலுவலர்களது விடுமுறையை விசேட விடுமுறையாகக் கணித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வடமாகாண பொது நிர்வாக செயலகத்தின் பிரதிப் பிரதம செயலர் இ.இரவீந்திரன் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளார். - (ஓ-19)

## இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வன்னியில் போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து கைதடி மற்றும் மிருசுவில் அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக சீருடை வழங்கப்பட்டுள்ளதாகவும் மிருசுவில் அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்காக அரச கலவன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை முதல் இணைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## ஆங்கில தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 2009 ஆம் ஆண்டிற்கான ஆங்கிலப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட்டு கோட்ட மட்டப் போட்டி தெரிவுகளுக்காக பங்குபற்றும் மாணவ மாணவிகளின் பெயர் விபரங்களை ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முன்னராக கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் தொழில் திணைக்களப் பாடசாலையில் மரவேலைப் பயிற்சி பெற்ற 25 இளைஞர் , யுவதிகளுக்கு இம்மாதம் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட தொழில்துறை திணைக்கள அலுவலர் பி.ராகவன் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## கோப்பாய்-கைதடி பாலம் சேதம்

கோப்பாய்-கைதடிப்பாலம் சேதமடைந்துள்ளதால் அவ் வீதியூடான போக்குவரத்து கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தடைப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழையினால் பாதை சேதமடைந்துள்ளது. இதனால் கோப்பாய்-கைதடி வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இவ் வீதியூடாக பெருமளவான மக்கள் பயணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் பழமை வாய்ந்த குடிநீர் விநியோகத்திட்டத்தினை புனர்நிர்மாணம் செய்து குடிநீர் சேவையை அபிவிருத்தி செய்வது தொடர்பான கலந்துரையாடலொன்று நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றி ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியுதவுமாறு நீர்ப்பாவனையாளர்கள் , நலன்விரும்பிகள் அனைவரையும் மாநகர ஆணையாளர் கேட்டுக் கொள்கிறார். (ஓ)

## ஆங்கில பாட பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்படும் ஆங்கில பயிற்சி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

விண்ணப்பித்தவர்கள் சான்றிதழ்களது மூலப் பிரதியுடன் புகைப்படப் பிரதியினையும் கொண்டு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)

## தொலைபேசி தொடர்புகள் முற்றாக செயலிழந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் தொலைபேசி தொடர்புகள் இம் மாதம் முதலாம் திகதியிலிருந்து முற்றாக செயலிழந்துள்ளது.

இதன்னால் அலுவலக உத்தியோகத்தர்களும் மக்களும் அவசர தேவைகளின் நிமித்தம் தொடர்புகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

## சஞ்சிகை வெளியீடும் மாணவர் ஒன்றுகூடலும்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை உயர் வகுப்பு மாணவ மன்றத்தின் ''ஒளியை நோக்கி'' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வும் பாடசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

உயர் வகுப்பு மாணவ மன்றத் தலைவி செல்வி. துளசி சிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் யாழ். மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருமான செல்வி. மீரா கந்தசாமி கலந்துகொள்வார்.சஞ்சிகை வெளியீட்டுரையைச் செல்வி. கோபிநங்கா இராஜகுமாரனும். சஞ்சிகை ஆய்வுரையை ஆசிரியை திருமதி வாசுகி அரவிந்தனும் நிகழ்த்துவார்கள். நன்றியுரையை மன்றச் செயலாளர் செல்வி. தர்சிகா பரமசாமி நிகழ்த்துவார். இன்று வெளியிடப்படும் ஒளியை நோக்கி சஞ்சிகை பாடசாலையின் 10 ஆவது சஞ்சிகை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ)

## முன்பள்ளிகளுக்கான புத்தக விநியோகம்

(அல்வாய்)

முன்பள்ளிகளுக்கு வடமராட்சி கல்வி வலயத்தினால் புத்தகங்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை, மருதங்கேணி கோட்ட முன்பள்ளிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும், கரவெட்டி கோட்ட முன்பள்ளிகள் இம்மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கும் வடமராட்சி கல்வி வலய நிதிப் பிரிவில் இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஏற்கனவே வழங்கப்பட்ட 20 பாடசாலைகளுக்கு மீளவும் புத்தகங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-2-19)

## விளையாட்டு விழா

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-2-19)




## வீதியோர பள்ளத்தால் போக்குவரத்து சிரமம்

(கோண்டாவில்)

கடந்த நவம்பர் மாதம் பெய்த கனமழை மற்றும் புயலினால் கோண்டாவில் கிழக்கு ஆசிமடத்தில் அரசமரம் பாறி வீழ்ந்தபோது ஏற்பட்ட பள்ளம் இன்னமும் முற்றாக நிரப்பப்படவில்லை.

மரத்தின் அடிப்பாகமும் வீதி:யாரத்தின் அருகே காணப்படுவதனால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. இரவு நேரங்களில் மின்வெட்டு அமுலுக்கு வரும்போது பள்ளத்தினுள் விழுந்து எழும்ப வேண்டி ஏற்படுவதுடன் எச்சரிக்கை சமிக்ஞை பலகை கூட வைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-36)

## நயினாதீவில் மருத்துவ முகாம்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவல் சபையினரின் அனுசரணை யுடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளால் நடத்தப்பட்டு வரும் மருத்துவ சேவையில், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்களான வைத்திய கலாநிதிகள் பேரானந்தராஜா, உமாபதி, ரவிராஜா ஆகியோரும் கலந்து மக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். (ஓ-4)

## மாபெரும் சேவைத் திட்ட முகாம்

தீவக லயன்ஸ் கழகத்தினரால் அறநெறிப் பாடசாலை மாணவர்களிற்கான மாபெரும் சேவைத்திட்ட முகாம் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதிகளினால் நடாத்தப்படவுள்ளது.

இம்முகாமில் மாணவர்களிற்கான மருத்துவ பரிசோதனை, மருந்து வழங்கல், விழிப்புணர்வு, பற்பரிசோதனை ஆகிய சேவைகளை வழங்குவதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான "திருமறைச் செல்வங்கள்" நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளதாக தீவக லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-14)

## லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநரின் உத்தியோகபூர்வ விஜயம்

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 B-1 மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ச MJF , அவஞ் பாரியார் லயன் சீமாட்டி கீதா ராஜபக்ச ஆகியோர் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்திற்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

மானிப்பாய் லோட்டன் வீதியில் உள்ள மூத்த லயன் உறுப்பினர் லயன் சொ.பாலகிருஷ்ணனின் இல்லத்தில் ஆளுநரின் வருகை நிகழ்வுகள் இடம்பெறும். இதில் பல செயற்திட்ட நிகழ்வுகள் தலைவர் டாக்டர் ஆர்.சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ)



அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த பூரணை தினத்தில் நடத்திய "பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்" என்ற கருப்பொருளில் அமைந்த கருத்தரங்கில் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை விரிவுரையாளர் விக்னேஸ்வரி பவனேசன், கோப்பாய் றோ.க.வித்தியாலய அதிபர் ச.லலீசன் ஆகியோர் கட்டுரைகள் வாசிப்பதையும், கலந்துகொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 95

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300–900

சைவ புராணங்களில் மாணிக்கவாசகர் இலங்கை பௌத்தர்களுடன் வாது செய்த ஒரு சைவத் தலைவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். திருவாதவூரர் புராணத்தில் மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் இலங்கையிலிருந்து சென்ற பௌத்தர்களுடன் வாது செய்து அவர்களை வெற்றிகொண்டதாகவும், அங்கு வந்திருந்த இலங்கை மன்னன் ஒருவனுடைய ஊமை மகளைப் பேச வைத்ததாகவும், அதன் விளைவாக இலங்கை மன்னன் சைவத்தைத் தழுவியதாகவும் கூறப்படுகின்றது.

இந் நிகழ்ச் சியுடன் ஒப்பிடக் கூடிய வகையில் பிற்பட்ட காலச் சிங்கள நூலாகிய நிகாய ஸங்கிரஹய நூல் ஸேன என்ற மன்னன் ஒரு துறவியால் சைவத்துக்கு மதம் மாற்றப்பட்டான் என்று குறிப்பிடுகின்றது. இது மாணிக்கவாசகரைப் பற்றிய குறிப்பாக இருக்க முடியும்.

இவ்வாறு இலக்கியச் சான்றுகளால் வெளிப்படும் வரலாறு என்னவெனில் ஆறாம் நூற்றாண்டின் பின் இலங்கையில் சைவ இயக்கம் சில வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்திக் குறிப்பாகத் தமிழர் மத்தியில் அம் மதம் வலுப்பெற உதவியது என்பதே. உறுதிப் படுத்தும் வகையில் ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் சைவம் சார்ந்த தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன.

இவை கிடைக்கும் இடங்களில் அகழ்வாய்வு நடத்தினால் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே அவ்விடங் களில் சைவ நிறுவனங்கள் இருந்ததை வெளிப் படுத்தும் சான்றுகள் கிடைக்கலாம்.

பெருமளவிலான அகழ்வாய்வுகள் அனுராதபுரத்தில் நீண்டகாலமாக நடத்தப்பட்ட காரணத்தினால், இங்குதான் மிகப் பழைய சைவ சமயத் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

இவற்றுள் சில பௌத்த நிறுவ னங்கள் உள்ள இடங்களில் கிடைத்திருப் ப தால், இவற்றுள் சிலவற்றை மஹாயான பௌத்தத் தொடர்புடையவையாகவும் கொள்ள இடமுண்டு, எடுத்துக்காட்டாக, பௌத்த பெரும் பள்ளியாகிய ஜேதவனாராம அமைந் துள்ள இடத்தில் அண்மையில் கிடைத்த அர்த்த நாரீஸ்வரர் சிலையைக் குறிப்பிடலாம். ஆனால் இப்படியான சமயஞ் சார்ந்த தனிப் பட்ட பொருள்களை விடக் கோயில்களின் அழிபாடுகளாகவும் கல்வெட்டுக்களாகவும் அனுராதபுரத்தில் நிலவிய சைவ மதம் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன என்பது கவனிக் கத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அனுராதபுரத்தில் பல சைவக் கோயில் களின் அழிபாடுகளும் அவற்றுடன் தொடர்புடைய சில தமிழ்க் கல்வெட்டுக்களும் சிவலிங் கங்களும் வெளிப்படுத்தப்பட்டன. இவை சோழர் காலத்துக்கு முற்பட்ட கலைப் பாணியில் அமைந்துள்ளன. இவை இலங்கையில் காணப்படும் மிகப் பழைய சைவ அழிபாடு களுள் அடங்கும். இங்குள்ள கோயில்கள் சிறியவையாகவும் முக்கிய பாகங்களாகிய கர்ப்பக்கிரகம், அந்தராளம் மற்றும் அர்த்த மண்டபம் ஆகியவற்றை மட்டும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

இந்த அழிபாடுகளிடையே தமிழ்க் கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. இவை சைவக் கோயில்களில் நந்தா விளக்கு எரிப்பதற்கு வழங்கப்பட்ட பணம் பற்றிய தகவல்களைத் தருகின்றன. இவற்றைக் கொண்டு இலங்கையில் அக்காலத்தில் இருந்த சைவக் கோயில்கள் தமிழ்நாட்டுக் கோயில்களைப் போன்று பராமரிக்கப்பட்டதை அறியலாம்.

இக் காலப் பகுதியில் மாதோட்டத்திலிருந்த திருக்கேதீஸ்வரம் ஒரு புனித தலமாக நாட்டில் பலராலும் கருதப்பட்டது. சைவங்கள் மட்டுமல்லாது சிங்கள பௌத்தர்களும் அவ்வாறு கருதினர். இது பத்தாம் நூற்றாண்டுச் சிங்களக் கல்வெட்டுக்களிலிருந்து தெரிய வருகின்றது.

புனித நதி என இந்துக்களால் கருதப் படும் கங்கை நதியின் கரையில் உயிர்க் கொலை புரிவது பெரும் பாதகமாகக் கருதப் பட்டதால், இடைக்காலக் கல்வெட்டுக் களில் பதிவுசெய்யப்பட்ட தானங்களைப் பாது காப்பதற்கு அல்லது விதிகள் மீறப்படாது இருப் பதற்குக் கல்வெட்டின் இறுதியில் கங்கை நதி சார்ந்த ஓர் ஓம்படைக்கிளவி எனப்பட்ட காப்பு வசனம் சேர்க்கப்பட்டது.

அது பொதுவாக, 'இதற்குப் பிழைப்பார் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தைப் பெறுவார்களாக' அல்லது 'கங்கைக் கரையில் பிர்ாமணரைக் கொன்ற பாவத்தைப் பெறுவார்களாக' என்று பொருள்பட அமைந்தது. அதேபோல, இலங்கையில் சிங்களக் கல்வெட்டுக்களில் 'மாதோட்டத்தில் பசுக் கொலை புரிந்த பாவத்தைப் பெறுவார்களாக' என்று பொருள்படும் வாசகம் காணப்படுகின்றது.

இது மாதோட்டத்துக்குக் கொடுக்கப்பட்ட புனித நிலையைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் அங்கு இருந்த திருக்கேதீஸ்வரர் கோயில் என்பதில் ஐயமில்லை.

திருகோணமலையிலும் மாதோட்டத்திலும் இருந்த பிரசித்தி பெற்ற ஈசுவரர் கோயில்களை விட மேலும் பல கோயில்கள் வட பகுதியில் இருந் திருக்கும் எனலாம். திருகோணமலைக்கு வடக்கே நிலாவெளியில் பத்தாம் நூற்றாண்டளவில் பொறிக்கப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டில் மற்சியேஸ்வரம் என்ற ஒருகோயில் குறிப்பிடப்படுகின்றது.

இது கோணேஸ்வரத்துக்குரிய இன்னொரு பெயராக இருந்தாலும், அதிலிருந்து வேறுபடும் ஒரு கோயிலாகவும் இருந்திருக்கலாம். கந்தளாயிலும் பதவியாவிலும் சோழ ராட்சி யின் போது கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வரும் கோயில்களுள் சில பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னரே நிறுவப்பட்டவையாக இருக் கலாம்.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**


இவ்வாறாக , சைவ சமயம் தொடர்பாகக் கிடைக்கும் சான்றுகள் நாயன்மாருடைய பக்தி இயக்கம் நடைபெற்ற காலத்தில் இலங்கையில் பரவிய சைவ மதச் செல்வாக்கை வெளிப்படுத்தும் சான்றுகள் எனலாம். இவற்றை விடக் கூடுதலான சான்றுகள் மேலும் அகழ்வாய்வுகள் நடத்தப்படும் போது வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 15

கறுப்பு–வெள்ளை தம்பதிகளுக்கு குழந்தை பிறப்பது குற்றமாகக் கருதப்பட்ட காலத்தில் தான் (அதாவது 1960ல்) ஒபாமாவின் தாயும் தந்தையும் திருமணம் செய்துகொண்டனர். கொலை, கற்பழிப்புப் போன்ற குற்றங்கள்



சிறுவயதில் ஒபாமா

போன்றே இதுவும் கடுமையான தண்டனைக் குரியதாகும். ஐக்கிய அமெரிக்காவின் அரைப் பங்கு மாநிலங்களில் இத்தகைய குற்றம் புரிந்தவர்கள் பயங்கரமாகத் தண்டிக் கப்பட் டனர்.

ஒபாமாவின் தந்தை ஆன் டண்ஹாமை (தாய்) தவறான எண்ணத்தோடு பார்த்தமைக்காக அவருக்கு கழுத்தில் சுருக்குப் போட்டு ஏதாவதொரு மரத்தில் தொங்க விட்டிருப் பார்கள். புதியன புகுதலையும் பழையன கழிதலையும் விரும்பும் வட மாநிலங்களில் உள்ள நகரங்களில் நிலைமை அவ்வளவு மோசமாக இருக்கவில்லை.

கறுப்பின மக்கள் மீண்டும் மீண்டும் சமத்துவத்திற்கான தங்கள் உரிமையை நிலைநாட்ட பாடுபட்டனர். இதனால் அமெரிக்கா களைத்துவிட்டது. 1964 இல் மார்ட்டின் லூதர் கிங் நோபல் பரிசு பெறுகிறார்.

1967 இல் ஒபாமாவுக்கு ஆறு வயது நிரம்பியது. இன வேற்றுமை ஓரளவு தீர்ந்த மாதிரி. அமெரிக்க உயர் நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்ப்பை வெளியிட்டது.

வேர்ஜினிய மாநிலம் கலப் புத் திருமணத்தைத் தடைசெய்யும் சட்டம் ஒன்றை இயற்றியிருந்தது. அந்தச் சட்டம் அமெரிக் காவின் அரசியல் யாப்புக்கு எதிரானது என்று உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒரு மைல் கல்லாகும்.

இந்தச் சூழலில் யாராவது தாங்களே மனமுவந்து தங்கள் மகளை கறுப்பர் ஒருவருக்கு கன்னிகா தானம் செய்து கொடுப்பார்களா? எப்படி அது நடந்தது? என்ற வினாக்கள் மகன் ஒபாமாவின் மனதில் எழுந்து விடை காணத் துடித்தன.

அங்கு ஒரு பழைய போட்டோ புத்தக அலுமாரி மேல் இருந்தது. அதில் பாட்டி ரூட்டு தன் தாத்தா பாட்டி சகிதம் வீட்டின் முன் நிற்கிறாள்.

### ஜம்பொன்

அவர்கள் ஸ்கொட்டிஸ்–இங்கிலிஸ் பரம்பரையிலிருந்து வந்தவர்கள் என்பது புலனாகின்றது. கன்ஸாஸ் மாநிலத்தில் வந்து குடியேறியவர்கள். கன்ஸாஸ், அமெரிக்க உள்நாட்டுச் சண்டையில் அமெரிக்காவின் ஐக்கியத்துக்காக ஆப்ரஹாம் லிங்கன் பக்கம் நின்று போராடியது.

மூதாதையர் ஒருவர் கிறிஸ்தோபர் கொலம்பஸ்– விருதுபெற்ற போர் வீரர். ஆனால் அவருடைய மாமியாரின் தங்கை முறையானவர்தான் ஜெவ்வேர்ஸன் டேவிஸ் என்பவரின் மனைவி. இந்த ஜெவ்வேர்ஸன் தான் லிங்கனுக்கு எதிரான தென் மாநிலங்களின் கூட்டணியின் (கொண்வெடெறசியின்) தலைவராவர்.

இத்தகைய தனி உலகமான கன்ஸாஸில் தான் ஒபாமாவின் தாத்தாவும் பாட்டியும் வளர்ந்தார்கள்.



கென்யா உறவினர்களுடன் ஒபாமா

நாலாபக்கமும் நிலப்பரப்பு பரந்து கிடந்தது. அங்கே வாழ்ந்த குடியேற்ற வாசிகள் ஒழுங்கு, கட்டுப்பாடு, துன்பங்களைத் தாங்குதல், புத்துணர்வு ஆகிய பண்புகள் நிரம்பப் பெற்றிருந்தனர்.

அத்துடன் கொடுமை இளைக்கவும் பின்னிற்காத தன்மையும் அவர்களி டமிருந் தன.

தாத்தாவும் பாட்டியும் சிறுவர் களாக இருக்கும்போது 20 மைல் தூரத்தில் தான் வாழ்ந்துள்ளார்கள்.

ரூட்டின் குடும்பம் அக்கம் பக்கத்தில் நற்பெயர் பெற்றிருந்தது. அவளின் தந்தை ஸ்ராண்டேட் ஒயில் கம்பனியின் உள்ளூர் முகாமையாளராக வேலை பார்த்தார். தாய் அயலிலுள்ள பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

ஆகையினாற்றான் பெரிய உலகப் பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்ட காலங்களில் கூட குறைவொன்றுமின்றி அவர்களால் வாழ முடிந்தது.

(தொடரும்)

# பாகிஸ்தானில் ஆட்சியை காப்பாற்ற சர்தாரி தீவிர முயற்சி

# எதிர்க்கட்சிகளின் இரண்டு கோரிக்கைகளை ஏற்றார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆட்சியை காப்பாற்றுவதற்கான தீவிர முயற்சியில் அதிபர் சர்தாரி ஈடுபட்டுள்ளார். எதிர்க்கட்சிகளின் இரண்டு கோரிக்கைகளை ஏற்க சம்மதம் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் முக்கிய எதிர்க்கட்சியான நவாஸ் ஷெரிப்பின் முஸ்லிம் லீக் சார்பில் பஞ்சாப் மாகாணத்தில் ஆட்சி அமைக்கப்பட்டது. முதல் மந்திரியாக நவாஸ் தம்பி ஷாபாஸ் இருந்தார்.

இதற்கிடையே நவாஸ், ஷாபாஸ் இரண்டு பேருமே தேர்தலில் போட்டியிடுவதற்கு பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட்டு தடை விதித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் முன்பு பதவியில் இருந்த தலைமை நீதிபதி இப்திகார் சவுத்திரியை மீண்டும் நியமிக்க வேண்டும் என்றும் நவாஸ் வலியுறுத்தி வருகிறார்.

அதற்காக நாடு முழுவதும் இருந்து நேற்று முன்தினம் முதல் மாபெரும் பேரணி தொடங்கியது. வருகிற 16 ஆம் திகதி அன்று இஸ்லாமாபாத்தில் பாராளுமன்றம் முன்பு அந்த பேரணி முடிவடைந்து முற்றுகை போராட்டம் நடைபெறவுள்ளது.

இப்திகார் சவுத்திரியை மீண்டும் தலைமை நீதிபதியாக்க அதிபர் சர்தாரிக்கு விருப்பம் கிடையாது. சர்தாரி மற்றும் அவரது மனைவியான மறைந்த பெனாசிர் பூட்டோ இருவருக்கும் முஷரப் அளித்த பொது மன்னிப்பை இப்திகார் சவுத்திரி ரத்து செய்து விடுவார் என்று அதிபர் சர்தாரி பயப்படுகிறார்.

இதற்கிடையே, சர்தாரியின் பல செயல்பாடுகளில் பிரதமர் யூசுப் ராசா கிலானிக்கும் உடன்பாடு கிடையாது. இத்தகைய சூழ்நிலையால், ஆட்சியை கைப்பற்றும் முயற்சியில் இராணுவ தளபதி ஈடுபட்டு வருகிறார்.

எனவே, ஆட்சியை காப்பாற்ற தீவிர முயற்சியில் சர்தாரி இறங்கி உள்ளார். ஈரானில்



இருந்து கடந்த புதன் இரவு பாகிஸ்தானுக்கும் வந்த உடனேயே, பிரதமர் கிலானியை சந்தித்து ஆலோசனை நடத்தினார். பின்னர் நவாஸ் ஷெரிப் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலரையும் அழைத்து பேச்சு நடத்தினார்.

எனினும், திட்டமிட்டபடி இஸ்லாமபாத் நோக்கி சட்டத்தரணிகளின் மாபெரும் பேரணி நேற்று முன்தினம் தொடங்கியது.

ஊரடங்கு உத்தரவை மீறி பேரணியாக சென்ற சுமார் ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சூழ்நிலையில் தன்னை கொலை செய்ய பாகிஸ்தான் அரசு சதி செய்வதாக நவாஸ் ஷெரிப் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒருபுறம் நவாஸ் கட்சியினர் மற்றும் சட்டத்தரணிகள் போராட்டம் விசுவரூபம் எடுத்து நிற்கும் நிலையில் இராணுவ தளபதியும் 16 ஆம் திகதி வரை 'கெடு' விதித்துள்ளார்.

எனவே, நவாசுடன் சமரச முயற்சியை சர்தாரி தொடங்கி இருக்கிறார். எதிர்க்கட்சியின் இரண்டு கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள சர்தாரி சம்மதம் தெரிவித்துள்ளார். அந்த கோரிக்கை எவை என்று வெளியிடப்படவில்லை.

அதுபோல, நவாஸ் ஷெரிப் மற்றும் அவரது சகோதரர் ஷாபாஸ், ஷெரிப் இருவருக்கும் மிகவும் முக்கியமானவர்களுக்கான (வி.வி.ஐ.பி) பாதுகாப்பு வழங்க பாகிஸ்தான் அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அது தொடர்பாக உள்துறை அமைச்சகத்தில் இருந்து நவாஸ் சகோதரர்களுக்கு கடிதம் அனுப்பபப்பட்டுள்ளது.

மேலும், பஞ்சாப் மாகாணத்தில் ஜனாதிபதி ஆட்சி விலக்கப்பட்டு பெரும்பான்மை உள்ள கட்சியின் அரசு அமைக்க வழி வகுக்கப்படும் என்று பிரதமர் கிலானி நேற்று முன்தினம் மாலை அறிவித்தார். அந்த மாகாணத்தில் நவாஸ் கட்சி பெரும்பான்மையுடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சர்தாரியின் சமரச நடவடிக்கைகள் குறித்து இந்திய தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த நவாஸ் ஷெரிப், "ஏற்கனவே உறுதி அளித்தபடி சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளை மீண்டும் பணியில் அமர்த்தினால் மட்டுமே சர்தாரியுடன் பேச்சு வார்த்தை நடத்த வாய்ப்புகள் உருவாகும்.

அவருக்கும் எங்களுக்கும் இடையிலான நம்பிக்கையில் பெரிய அளவிலான இடைவெளி உள்ளது என்றார்.

எனினும், "பாகிஸ்தானில் ஆட்சியை இராணுவம் கைப்பற்றுவதற்கான வாய்ப்பே கிடையாது" என்றும் அவர் உறுதிபட த் தெரிவித்தார். (ஓ-5)

## உலக பணக்காரர் பட்டியலில் மீண்டும் பில்கேட்ஸ் முதலிடம்

(நியூயோர்க்)

13 ஆண்டுகளாக உலகில் முதல் பணக்காரராக இருந்த அமெரிக்க கம்யூட்டர் தொழில் அதிபர் பில்கேட்ஸ். கடந்த ஆண்டு பின்னுக்கு தள்ளப்பட்டார். முதல் இடத்தை வாரன் பப்பெட்டும் 2 ஆவது இடத்தை கார் லோஸ் சிலிமும் பிடித்தனர். பில்கேட்ஸ் 3 ஆவது இடத்தில் இருந்தார்.



இப்போது பில்கேட்ஸ் மீண்டும் முதல் பணக்காரராகி இருக்கிறார். அமெரிக்காவில் இருந்து வெளிவரும் பொருளாதார பத்திரிகையான போபர்ஸ் வெளியிட்டுள்ள பணக்காரர்கள் பட்டியலில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பில்கேட்சின் தற்போதைய சொத்து மதிப்பு ரூ. 2 லட்சம் கோடி. வாரன் பப்பெட் 2 ஆவது இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளார். அவருடைய சொத்து ரூ. 1 லட்சத்து 85 ஆயிரம் கோடி.

சர்வதேச பொருளாதார நெருக்கடி யால் பில்கேட்ஸ் கடந்த ஆண்டு மட்டும் ரூ. 85 ஆயிரம் கோடி சொத்துக்களை இழந்தார். ஆனாலும் முதலிடத்துக்கு வந்துள்ளார்.

3 ஆவது இடத்தை மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்த கார்லோஸ் சிலிம் பிடித்துள்ளார். அவரது சொத்து மதிப்பு ரூ. 1 இலட்சத்து 75 ஆயிரம் கோடி. 4 ஆவது இடத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த லாரன்ஸ் எலிசன் உள்ளார். அவருடைய சொத்து மதிப்பு ரூ. 1 இலட்சத்து 15 ஆயிரம் கோடி.

இந்தியாவில் முகேஷ் அம்பானி ரூ. 97 ஆயிரத்து 500 கோடியுடன் 7 ஆவது இடத்திலும், லட்சுமி மித்தன் ரூ. 96 ஆயிரத்து 500 கோடியுடன் 8 ஆவது இடத்திலும் உள்ளனர்.

தற்போதைய உலக மில்லியனர்கள் (பணக்காரர்கள்) பட்டியலில் 793 பேர் இடம் பெற்று உள்ளனர். கடந்த ஆண்டு ஆயிரத்து 125 பேர் இடம் பெற்று இருந்தனர்.

சர்வதேச பொருளாதார நெருக்கடியால் 30 சதவீதம் பேர் குறைந்து விட்டனர். இப்போதைய பட்டியலில் 25 இந்தியர்கள் இடம் பிடித்துள்ளனர். (ஓ-5)

## நயகராவில் குதித்து காயமின்றி உயிர் தப்பியவருக்கு அபராதம்

(டொரன்டோ)

உலகின் மிகப்பெரிய நீர் வீழ்ச்சியான நயாகராவில் குதித்தவர் காயமின்றி உயர் பிழைத்துள்ளார். அமெரிக்காவையும், கனடா நாட்டையும் இணைக்கும் நயாகரா வீழ்ச்சி, 170 அடி உயரத்திலிருந்து நொடிக்கு 6 இலட்சத்து 75 ஆயிரம் கலன் தண்ணீரைக் கொட்டிக்கொண்டிருக்கிறது.

இவ்வளவு உயரத்திலிருந்து தண்ணீர் கொட்டுவதால் நீர்திவலைகள் சூழ்ந்து அந்த பகுதி புகை மூட்டம் போல் காட்சியளிக்கும்.

இந்த அரிய காட்சியை பார்ப்பதற்காக உலகம் முழுவதும் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகின்றனர். சுற்றுலா பயணி ஒருவர் நயாகரா வீழ்ச்சியில் விழுந்து விட்டதாக கடந்த புதன்கிழமை கனடா நாட்டு பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

உடனடியாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். புயல் வேகத்தில் ஓடும் நீரில் அகப்பட்ட அந்த நபர் ஒரு இடத்தில் ஒதுங்கியிருப்பதைக் கண்ட பொலிஸார் அவரை மீட்டு மருத்துவ மனையில் சேர்த்துள்ளனர்.

கின்னஸ் சாதனை படைப்பதற்காக, நீர் வீழ்ச்சியில் குதித்ததாக கிர்க் ஜோன்ஸ் (40) என்ற இந்த நபரின் நண்பர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இதை அவரது தாய் மறுத்துள்ளார். போதிய பாதுகாப்பின்றி இங்கு குதிக்கவோ, குளிக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. இதை மீறி ஜோன்ஸ் குதித்ததால் அவருக்கு கணிசமான தொகையை பொலிஸார் அபராதமாக விதித்துள்ளனர். (ஓ-5)

## உலக தரிசனம்

## ஹெலிகொப்டர் விழுந்து கடலில் மூழ்கியதில் 17 பேர் பலி

(செயின்ட்ஜான்ஸ்)

அட்லாண்டிக் கடலில் கனடா நாட்டுக்கு அருகே நியூ பவுண்ட் லேண்ட் என்ற தீவு



உள்ளது. இங்கு எண்ணெய் கிணறு தோண்டும் பணி நடந்தது. இந்த பணியில் ஈடுபட்ட ஊழியர்களை பணி முடிந்ததும் ஹெலிகொப்டரில் அழைத்து சென்ற போது நடுவானில் ஹெலிகொப்டரில் இயந்திர கோளாறு ஏற்பட்டு நடுக்கடலில் விழுந்து மூழ்கியது.



அதில் இருந்த 18 ஊழியர்களும் ஹெலி கொப்டரோடு சேர்ந்து மூழ்கினார்கள். உடனே மீட்பு குழுவினர் விரைந்து சென்றனர்.

ஒரே ஒருவர் மட்டும் கடலில் மிதந்து கொண்டிருந்தார். அவரை மீட்டனர். மற்றொருவர் பிணமாக மிதந்தார்.

மற்ற 16 பேரும் ஹெலி கொப்டரோடு மூழ்கி இறந் திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஹெலி கொப்டரை மீட்கும் பணி நடந்து வருகிறது. (ஓ-5)

## முன்னாள் அதிபர் புஷ் மீது ஷூ வீசிய அல் ஜெய்திக்கு 3 ஆண்டுகள் சிறை

(பாக்தாத்)

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் புஷ் மீது ஷூ வீசிய அல்ஜெய்திக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபராக இருந்த புஷ் ஈராக்குக்கு வந்த போது பத்திரிகையாளர் ஒருவர் புஷ் மீது அடுத்தடுத்து ஷூக்களை வீசினார்.

இந்த சம்பவம் உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்நிலையில் அல் ஜெய்திக்கு தற்போது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

(ஓ-5)

# நகைச்சுவை நடிகர் ஓமக்குச்சி நரசிம்மன் மரணம்

(சென்னை)

பிரபல நகைச்சுவை நடிகர் ஓமக்குச்சி நரசிம்மன் கடந்த புதன்கிழமை இரவு மரணமடைந்தார். இவருக்கு தொண்டையில்



புற்று நோய் ஏற்பட்ட நிலையில் வைத்தி சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். கடந்த 4 நாட்களுக்கு முன்பு உடல் நிலை மோச மானதையடுத்து தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி கடந்த புதன் கிழமை இரவு 9.30 மணிக்கு மரணம் அடைந்தார். இறக்கும் போது அவருக்கு வயது73.

இவர் முன்னணி நடிகர்கள் ரஜினி, கமல், சரத்குமார், அர்ஜுன் போன்ற பலருடன் நடித்துள்ளார்.


கவுண்டமணியுடன் இணைந்து பல படங்களில் நகைச்சுவையாக நடித்துள்ளார். இவர் சுமார் 1500க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

அத்துடன் 150இற்கும் மேற் பட்ட நாடகங்களிலும் நடித்துள்ளார். "நார தரும் 4 திருடர்களும்" என்ற நாடகத்தில் ஓமக் குச்சி என்ற பெயரில் நடித்தார். அதுவே பின்னாளில் அவர் பெயரோடு இணைந்தது.

"அவ்வையார்" என்ற படத்தில் அறிமுக மானார். 1969 இல் "திருக் கல்யாணம்" என்ற படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்தார்.

"குடும்பம் ஒரு கதம்பம்", "சம்சாரம் அது மின்சாரம்", "மீண்டும் கோகிலா", "இந்தியன்" "ஜெண்டில்மேன்", "முதல்வன்" "சூரியன்" போன்ற "ஹிட்" படங்களில் நடித்து ள்ளார்.

"சூரியன்" படத்தில் ஓமக்குச்சி நரசிம்மன் மேல் எரிச்சலாகும் கவுண்டமணி "நாரா யணா இந்த கொசுத் தொல்லை தாங்க முடிய லப்பா" என்று பேசும் வசனம் பிரபலம், "இந்தியன்" படத்தில் கவுண்டமணியிடம் கைகள் நடுங்கி டிரைவிங் லைசென்ஸ் வாங்குவது.., "முதல்வன்" படத்தில் வடிவேலுவின் இடுப்பில் குத்தி "போடா பண்ணி" என திட்டவைத்து மேலதிகாரியிடம் மாட்டி விடுவது... போன்றவையும் வயிறு நோக சிரிக்க வைக்கும் நகைச் சுவைகளில் சிலவாகும். (ஓ-5)




## இலங்கைத் தமிழர் வாழ்வில் பள்ளம் ஏற்படாமல் இருக்க...

இலங்கைப் பிரச்சினையில் மட்டுமாவது ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்று எழுதியிருந்தேன். அந்த வேண்டுகோளை அலட்சியப் படுத்தியதோடு, என்னை சிலர் மிகவும் இழிவுபடுத்தி பேசியும்; எழுதியும் இருப்பதை காலை எடுகளில்காண நேர்ந்தது. அவர்கள் தூற்றியிருப்பதை என் உடல் தாங்குகின் றதோ இல்லையோ இலங் கைத்தமிழர் வாழ்வில் பள்ளம் ஏற்படாமல் இருக்க என் உள் ளம் தாங்கித் தானே ஆக வேண்டும் என்று எழுதினேன். இவ்வாறு கலைஞர் கருணாநிதி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நாட்க ளில் தனது தினக் குறிப்பில் எழுதியுள்ளார். ஓ

## ஜெயலலிதாவா, மாயாவதியா: பிரதமர் வேட்பாளர் யார்?

தமிழகத்தில்3 ஆவது அணியில் மொத்தம் 10 கட்சிகள் இடம் பெற்றுள்ளன. தெலுங்கு தேசம், அதிமுக, பகுஜன் சமாஜ் கட்சி, தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி, மதச் சார்பற்ற ஜனதா தளம், அரியானா ஜனகித் காங்கிரஸ், மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் இந்திய கம்யூனிஸ்ட், ராஷ்ட்ரீய சோஷியலிஸ்ட், பார்வர்டு பிளாக், ஆகியவை அந்த 10 கட்சிகளாகும்.

நேற்று முன்தினம் நடந்த தொடக்க விழா கூட்டத்தில் ராஷ்ட்ரீய சோஷியலிஸ்ட் கட்சியைத் தவிர 9 கட்சிகளின் தலைவர்கள், பிரதி நிதிகள் கலந்து கொண்டு பேசினார்கள்.

அப்போது 3 ஆவது அணி சார்பில் தேர்தல் அறிக்கை வெளியாகும் போது, பிரதமர் வேட்பாளர் பற்றியும் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டது.

'3 ஆவது அணி தலைவர்களில் சிலரது பெயர் பிரதமர் வேட்பாளராக அடிபடுகிறது. சந்திரபாபு நாயுடுவும், தேவேகவுடாவும் பிரதமர் பதவியில் தங்களுக்கு விருப்பம் இல்லை என்று கூறி விட்டனர்.

கம்யூனிஸ்ட் தலைவர்களும் பிரதமர் பதவி மீது நாட்டம் கொள்ளவில்லை இவர்களைத் தவிர்த்துப் பார்த்தால் 3 ஆவது அணி தலைவர்களில் மாயாவதியும் ஜெயலலிதாவும் தான் இருக்கிறார்கள்.

இவர்கள் இருவரில் ஒருவர் தான் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படக் கூடும்என்று தெரிகிறது. இது தொடர்பாக மாயாவதியிடமும், ஜெயலலிதாவிடமும் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்க 3 ஆவது அணி மூத்த தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். (ஓ-5)

## நான் நவீன ஹிட்லரா? வைகோவுக்கு கலைஞர் பதில்

(சென்னை)

கொளத்தூர் மணி தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யபட்படிருக்கிறார். இதன் மூலம் தமிழக முதல்வர் கலைஞர் நவீன ஹிட்லராகிவிட்டார் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ சேலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசினார்.

இது குறித்து முதல்வர் கருணாநிதி,

ராஜிவ்காந்தி கொலை செய்யப்படவில்லை. அவருக்கு தரப்பட்டது மரண தண்டனை என்று பேசியவர் கொளத்தூர் மணி.

அவர் இந்திய ஒருமைப்பாட்டிற்கு எதிராக பேசவில்லை என்கிறார் வைகோ.

பொடா சட்டத்தில் அ.தி.மு.க ஆட்சியிலே இவரைப் பிடித்து சிறையிலே ஜெயலலிதா அடைந்திருந்த போது சிறைவாசலிலும் நீதிமன்ற வாசலிலும் காத்திருந்து பிணையில் வெளியே வரும்படி கேட்டுக் கொண்ட நான் இவருக்கு ஹிட்லர்.

ஆனால் இவரைப்பிடித்து சிறையிலே போட்டவர் இவருக்கு இப்போது மகாத்மா காந்தியாக தெரிகிறார்!

2002 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் அன்றைய முதல் - அமைச்சர் ஜெயலலிதா இலங்கை அரசு பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து ஆவேசமாக பேசியது. இன்னமும் எல்லோருடைய செவிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. காதில் பஞ்சை வைத்து அடைத்திருப்பவர்களுக்கு அந்த ஒலி எப்படி கேட்கும் என்று தெரிவித்துள்ளார். (ஓ-5)

## டெல்லியில் உள்ள மனிதாபிமானம் — தமிழக மக்களிடம் இல்லை — கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

ம.தி.மு.க. வில் இருந்து மு.கண்ணப்பன் விலகிய சம்பவம் குறித்து முதல்வர் கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில்,

ம.தி.மு.க. வில் இருந்து அவர் விலகப் போவதாக எனக்கு செய்தி வந்தது. ஆனால் அதற்கு காரணம் நான்தான் என்பது இன்றுதான் தெரிந்தது.

மருத்துவமனையிலே இருந்த என்னை கண்ணப்பன் வந்து பார்த்ததுதான் முழு முதல் காரணம் என்பதை கேட்ட போது அதற்கு நாம் காரணமாக இருந்து விட்டோமே என்ற வருத்தம் ஏற்பட்டது.

டெல்லியில் பிரதமருக்கு அறுவை சிகிச்சை என்றால் எதிர்கட்சித்தலைவர் அத்வானி நலம் விசாரிக்கிறார். வாஜ்பாய்க்கு உடல்நலம் சரியில்லை என்றால் சோனியா காந்தி சென்று விசாரிக்கிறார். விரைவில் நலம் பெற வாழ்த்துகிறார். ஆனால் இங்கு தான் உடல் நலக்குறைவாக உள்ள வனை சென்று பார்ப்பதே பாவம் என்று கருதப் படுகிறது.



எம்.ஜி.ஈஆர். கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த போது நானும் பிரார்த்திக் கிறேன் என்று தொடர் கட்டுரை எழுதியவன் நான். ஆனால் ஒவ்வொருவரை பற்றியும் உலகம் புரிந்து கொள்ள இப்படிப்பட்ட சம்பவங்கள் உதவி செய்கின்றன என்று தெரிவித்துள்ளார். (ஓ-5)

## பாகிஸ்தான் நிலவரம் குறித்து இந்தியாவின் நிலை என்ன?

(புதுடில்லி)

பாகிஸ்தானில் நிலவுவது உள்நாட்டுப் பிரச்சினை அதை அங்குள்ள அரசும், மக்களும் தீர்த்துக் கொள்வர் என, இந்திய அரசு தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் நிலவரம் குறித்து நிருபர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதாவது,

பாகிஸ்தானில் நிலவும் பிரச்சினையை அந்நாட்டு அரசே தீர்த்து கொள்ளும். அண்டை நாடுகளுடன் குறிப்பாக பாகிஸ்தானுடன் அமைதி, நல்லெண்ணம் மற்றும் மேம்பாட்டையே நாம் விரும்புகிறோம்.

பாகிஸ்தானில் தற்போது நிலவுவது உள்நாட்டுப் பிரச்சனை. அதை எவ்வாறு தீர்த்துக் கொள்வது என்பதை அந் நாட்டு மக்களும் அரச நிர்வாகத்தினரும் முடிவு செய்து கொள்வர். இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறினார். இந் நிலையில், பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவைக் குழுவின் கூட்டம் நேற்றுமுன் தினம் நடந்தது. இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின், முதன் முறையாக அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு நிலவரம் குறித்த விடயங்களைக் கேட்டறிந்தார். அண்டை நாடான பாகிஸ்தானில் நிலவும் அரசியல் நிலையற்ற தன்மை, எல்லை தாண்டிய பயங்கரவாதத்தினால் இந்தியாவுக்கு ஏற்படும் பாதிப்புப் போன்ற விடயங்களையும் கேட்டறிந்தார். இக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இராணுவ அமைச்சர் அந்தோணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில், பாகிஸ்தான் நிலவரம் குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க அரசு, பாக்கில் உள்ள அரசியல் கட்சிகள் வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். மக்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் போன்றவற்றையும் அங்குள்ள அரசு மதிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (ஓ-5)

## ஈழத்தமிழர் நிவாரணநிதி உண்டியலில் தங்கமோதிரங்கள்

(சென்னை)

இலங்கை தமிழருக்காக அதிமுக சார்பில் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தின் போது, உண்டியல்கள் வாயிலாக நிதி திரட்டப்பட்டது.

அனைத்து உண்டியல்களும் தலைமை கழகத்திற்கு கொண்டு வரப்பட்டு கடந்த 11 ஆம் திகதி வங்கி அதிகாரிகள் முன்னிலையில் எண்ணப்பட்டது.

அப்போது, அதில் 11 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலைகள், பிற நாட்டு நாணயங்கள், இரண்டு தங்க மோதிரங்கள், ஒரு கைக்கடிகாரம் போன்ற பொருட்களையும் பொது மக்கள் அளித்துள்ளனர்.

காசோலைகள் மற்றும் பிற நாட்டு நாணயங்கள் வங்கி மூலமாக மாற்றப்பட்டும் தங்க நாணயங்கள் மற்றும் கைக் கடிகாரம் போன்ற பொருட்கள் அதற்குரிய கடைகளில் கொடுத்து அதற்கான தொகை பெறப்பட்டு இலங்கை தமிழர்களுக்கான நிவாரண நிதியில் சேர்க்கப்பட்டு, ஒட்டு மொத்த தொகைக்கான வரைவோலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இலங்கை தமிழர்களுக்கு வழங்கப்படும்.

என அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

(ஓ-5)

# மண்புழு வளர்ப்பும் அனுகூலங்களும் 5

### மண்புழுக்களின் இயற்கை எதிரிகள்

சிற்றுண்ணி, எறும்பு இன்னும் சிலவகைப் பூச்சி போன்றவற்றை கவர்வதற்குத் தேவையானளவு ஈரப்பதனை மண்புழுப் படுக்கைகள் எப்பொழுதும் கொண்டிருப்பதனால் இவ் இயற்கை எதிரிகளின் தொந்தரவு மண்புழு வளர்ப்புக்கு தடையை ஏற்படுத்தலாம். உரிய முறையில் கவனிக்காவிடின் மண்புழுப் படுக்கை அளவுக்கதிகமான அமிலத் தன்மையை கொண்டதாக மாறிவிடுகிறது.

எனவே இத்தகைய அமிலத்தன்மை கொண்ட மண்புழுப் படுக்கைகளும் மண்புழுக்களின் எதிரிகளான சிற்றுண்ணிகளின் பெருக்கத்துக்கு சாதகமாக அமைகின்றன. மெல்லுடலைக் கொண்ட மண்புழுக்களுக்கு இவற்றால் ஏற்படும் பாதிப்பும் சற்று அதிகமானதாகவே இருக்கும். பொதுவாக வெள்ளை, சிவப்பு சிற்றுண்ணிகள் மண்புழுக்களுக்கு ஊறு விளைவிக்கின்றன.

### சிவப்பு சிற்றுண்ணி (Red mite)

இவை மண்புழுக்கழுடன் ஒட்டியிருந்து அவற்றின் உடல் திரவத்தையும், குருதியையும் உறிஞ்சும் ஒட்டுண்ணியாக தொழிற்படுகிறது.

### வெள்ளை சிற்றுண்ணி (White mite)

இவை காயமடைந்த அல்லது இறந்த மண்புழுக்களை மட்டுமே உண்ணும். அத்துடன் மண்புழுக்களின் உணவை தாம் உட்கொள்வதன் மூலம் உணவுக்கு போட்டியாகவும் அமைகின்றன. இவ்வகையான சிற்றுண்ணிகளின் எண்ணிக்கை மண்புழு படுக்கையில் அதிகரிக்கும் போது எல்லா மண்புழுக்களும் அடிப்பகுதிக்கு சென்று விடும். இதனால் மண்புழு உர ஆக்கம் பாதிப்படைவதுடன் மண்புழுவின் வளர்ச்சியும், பெருக்கமும் குறைவடையும்.

### இப்பிரச்சினையைத் தவிர்க்கும் வழிவகைகள்

- இவ்வாறான சிற்றுண்ணிகளின் பிரச்சினை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அளவுக்கதிகமான உணவுப் பொருட்களை மண்புழுப் படுக்கையில் சேர்ப்பதனைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில் உணவுகளின் நொதித்தல் செயற்பாட்டால் உருவாகும் வாயுக்கள் மண்புழு படுக்கையின் அமிலத் தன்மையை அதிகரிக்கும். இவ் அமிலத்தன்மையே வேண்டாத விருந்தாளிகளை வரவழைக்கிறது.
- மண்புழு படுக்கை தேவையானளவு ஈரலிப்பை மாத்திரம் கொண்டிருப்பதனை உறுதி செய்தல் வேண்டும். நீர் வடி திறனை அதிகரித்தல், அளவுக்கதிகமான நீர் சேர்வதனை தடுத்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் இதனை நிவர்த்தி செய்யலாம்.
- இறைச்சி,பழங்கள், பால் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றை அதிகமாக இடுவதனைத் தவிர்த்தல்.
- ஈரக்கடதாசி, உருளைக்கிழங்கு சீவல் போன்றவற்றை மண்புழுப் படுக்கையின் மேற்பகுதியில் பரவி வைப்பதால் இயற்கையெதிரிகள் கவரப்படுகின்றன. பின்னர் இந்த ஈரக் கடதாசி மற்றும் உருளைக்கிழங்கு சீவல்களில் கூட்டமாக சேர்ந்திருக்கும் எறும்பு, சிற்றுண்ணி போன்றவற்றை அழிப்பதன் மூலம் சிறிது சிறிதாக இந்த எதிரிகளைக் குறைக்க முடியும்.

### மண்புழு வடி திரவம் (Vermi wash)

மண்புழுவின் உடல் திரவத்தின் ஒரு பகுதி மண்புழுவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் ஒரு சில செயன்முறைகளினூடாகப் பிரித்தெடுக்கப்படுகின்றது. இவ்வாறு பெறப்படுகின்ற ஒரு வகைத் திரவமே மண்புழு வடிதிரவம் ஆகும்.

இது பயிர்களுக்கு நன்மை செய்வது மட்டுமல்லாமல் சுயதொழில் வாய்ப்பையும் பெற்றுத் தரவல்ல ஒரு குடிசைக் கைத்தொழில் வழங்கியாகவும் அமையும்.

போத்தல்களில் அடைக்கப்பட்ட தரமான மண்புழு வடிதிரவமானது தமிழ்நாட்டிலுள்ள சிறு கைத்தொழிலாளர்களுக்கு அதிகளவு பண மீட்டித் தருகிறது.

இவ்வடி திரவம் தாவர வளர்ச்சியைத் தூண்டும் பதார்த்தங்களை கொண்டிருப்பதால் பயிர்களின் இலைப் பகுதிக்கு இதனை விசிறுவதன் மூலம் பயிர் வளர்ச்சியைத் தூண்டி விளைச்சலை அதிகரித்துக் கொள்ளலாம். அத்துடன் இதனை விசிறுவதன் மூலம் சிலவகையான பீடைகளும் கட்டுப் படுத்தப்படுவதனால், இரசாயன பீடை நாசினிகளின் பாவனையை இதன் துணைகொண்டு குறைத்துக் கொள்ளலாம்.

### மண்புழு வடிதிரவ தயாரிப்பு முறை

இரண்டு வேறுபட்ட முறைகள் மூலம் இவை தயாரிக்கப்படுகின்றன.

**முறை 1 :-**

பாத்திரம் ஒன்றினுள் 37 - 40°C வெப்பநிலையுடைய வெது வெதுப்பான சுடு நீரானது எடுக்கப்பட்டு சுமார் 1 கிலோகிராம் நிறையுடைய முழு வளர்ச்சியடைந்த கழிவுகளுடன் கலக்காத நிலையிலுள்ள மண்புழுக்களை அந்த மிதமான வெந்நீரில் இட்டு சுமார் 2 நிமிடங்கள் வரை மெதுவாக அசைக்க வேண்டும்.

இந்த மிதமான வெப்பம் காரணமாக மண்புழுக்களின் உடலிலிருந்து உடல் திரவம் குறிப்பிட்டளவு வெளியேறும்.

பின்னர் இம்மண் புழுக்கள் யாவும் வெளியிலெடுக்கப்பட்டு அறை வெப்பநிலையிலுள்ள நீருக்குள் இடப்படும். இதன் மூலம் உடலில் ஒட்டியுள்ள உடல் திரவம் கழுவப்படுவதுடன் வெப்பநிலை அதிர்ச்சியிலிருந்தும் மண்புழுக்கள் விடுபட வழிவகுக்கும்.

இம்முறை மூலம் எவ்வித முன்னேற்பாடுகளும் இன்றி உடனடியாக மண்புழு வடிதிரவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு வெப்பநிலை 37 - 40°C யை விட அதிகரிக்காமல் இருப்பது மிக முக்கியம். ஏனெனில் இதைவிட வெப்பநிலையதிகரித்தால் மண்புழுக்கள் அதனை தாங்கிக் கொள்ளாது.


இவ்வாறு பெறப்பட்ட மண்புழு வடிதிரவத்தை நீருடன் கலந்து அந்தூரியம் தாவரத்தின் இலைப்பகுதிக்கு தெளித்துச் செய்யப்பட்ட சோதனையில் அந்தூரிய தாவரங்கள் காலத்துக்கு முந்தி பூத்தமையும் முழுவளர்ச்சியடைந்த பூக்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

**முறை 2 :-**

இம்முறை மூலம் வெவ்வேறு இடங்களில் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்ட மண்புழு வடிதிரவம் தயாரிக்கும் அமைப்புகள் காணப்படுகின்றன. ஆனால் அதன் அடிப்படை செயன்முறை எல்லா இடங்களிலும் ஒன்று தான். அதாவது ஒரு பக்க வாய் திறக்கப்பட்ட 250 லீற்றர் கனவளவு கொள்ளக்கூடிய நீர்த்தாங்கி ஒன்றுக்கு அதன் அடிப்பகுதியில் நீர்த்திருகி (Tap) பொருத்தப்பட வேண்டும்.

**இதையும் கேளுங்க!**

மண்புழுக்கள் சில இடங்களில் மனித உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் சில நோய்களைக் குணப்படுத்துவதற்காக யுனானி மருத்துவத்திலும் பயன்படுத்தப் படுகின்றது.




பின்னர் இந்த நீர்த்தாங்கியின் 25 சென்ரிமீற்றர் உயரத்துக்கு உடைந்த செங்கற்களும், அடுத்த 25 சென்ரிமீற்றர் உயரத்துக்கு பெருமணலும் இட்டு மேற்புறமாக நீரை செலுத்தி எதுவித தடையுமின்றி நீர்திருகியூடாக நீர் வேளியேறுகிறதா என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

உறுதிப்படுத்திய பின்னர் 30-45 சென்ரிமீற்றர் உயரத்துக்கு மேல் மண்ணையிடல் வேண்டும். பின்னர் அதன் மேல் மாட்டு சாணியுடன் சேர்த்து காய்ந்த சருகுகள், இலைகள் என்பவற்றையிட்டு அதனுடன் சுமார் 100 வரையான முழுவளர்ச்சியடைந்த மண்புழுக்களை யிடல் வேண்டும். (epigeic + anecic) இவ்வாறு செய்த பின்னர் சுமார் 15 நாட்களுக்கு நீர்த்திருகியை திறந்தபடி விட்டு தொகுதியை ஈரலிப்பாக பேணுவதற்கு தினமும் தண்ணீர் தெளித்தல் வேண்டும்.

பின்னர் 16 ஆவது நாள் திருகி பூட்டப்பட்ட பின்னர் 5 லீற்றர் தண்ணீர் (மொத்த தாங்கியின் கொள்ளவின் 1/50 பங்கு) நீர்த் தாங்கியில் ஊற்றப்பட்டு அன்றிரவு முழுவதும் நீரானது மண்புழு உரம் மற்றும் மண்புழு என்பவற்றினூடாக வடிந்து செல்ல அனுமதித்தல் வேண்டும்.

பின்னர் அடுத்த நாள் காலை திருகி திறக்கப்பட்டு அந்த வடிதிரவம் போத்திலினுள் சேகரிக்கப்படும். இதே போல் மறு நாளும் செய்து சேரிக்கப்படும். இங்கு மாட்டு சாணி, வைக்கோல், சருகுகள் போன்றவை தகுந்த முறையில் அவதானிக்கப்பட்டு உரிய காலத்தில் மாற்றப்பட வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட மண்புழு வடிதிரவமானது போத் தல்களில் அடைக்கப்பட்டு சந்தையில் விற்பனைக்கு வருகின்றன.

இவை நீருடன் கலந்து ஐதாக்கப்பட்ட (10%) பின்னரே பயிர்களுக்கு விசிறப்படுகிறது. சில இடங்களில் கோசலத்துடன் கலந்தும் பயிர்களுக்கு விசிறப்படுகின்றது. அவ்வாறு கலப்பதாயின் 1லீற்றர் மண்புழு வடிதிரவத்துடன் 1 லீற்றர் கோசலமும் 8 லீற்றர் நீரும் கலக்கப்படுகிறது.

மண்புழு வடிதிரவத்தை தயாரிக்கும் போது நுண்ணங்கிகளை தேர்வு செய்து வடிகட்டும் எந்தவித வடிகருவிகளையும் பாவிக்காத நிலையில் பல நன்மை தரு நுண்ணங்கிகளுடன் சிறிதளவு எதிர்மறை விளைவுகளைத் தரக்கூடிய சில நுண்ணங்கிளும் செல்ல வாய்ப்புள்ளது எனும் கருத்தையும் மறுப்பதற்கில்லை.




எணவே இது பற்றிய மேலதிக விபரங்களையறியும் பொருட்டு விவசாய பீட முட்பட மேலும் பல இடங்களில் இது சம்பந்தமான ஆய்வுகள் இடம் பெற்று வருகின்றன. இந்த ஆய்வு முடிவுகள் எதிர்காலத்தில் எம் விவசாயிகளுக்கு மேலும் பல உண்மைகளைச் சொல்லும்.


**த. கஜந்தன்**
விவசாய உயிரியல் (சிறப்பு)
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம், யாழ் பல்கலைக்கழகம்


சரி ஆர்ப்பாட்டமின்றி ஆயிரம் விடயங்களைச் செய்து கொண்டிருக்கும் மண்புழுக்கள் பற்றியும் அவற்றின் நன்மைகள் மற்றும் வளர்ப்பு முறை பற்றியும் தேவையானளவு தெரிந்து கொண்டிருப்பீர்கள். இனியும் என்ன தயக்கம் நீங்களும் மண் புழுவை வளர்த்துப் பாருங்களேன். உங்களுக்கும் உண்மை புரியும். (முற்றும்)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 6-II

தொலைதூர திறந்த கல்வி முறை இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினாலே ஆரம்பிக்கப்பட்டு ஏனையவற்றிலும் வழங்கப்பட்டு வருகின்றது. இம்மாதிரியான கல்வி முறையை இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக் கழகங்களினூடாக விஸ்தரிக்கும் திட்டமாக இலங்கை பல்கலைக்க கழக மானியங்கள் ஆணைக் குழுவினூடாக முதற்கட்டமாக திறந்த பல்கலைக் கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், றுகுண பல்கலைக்கழகம், கிழக்கிலங்கை பல்கலைக் கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பன முதலில் இணைந்துள்ளன. தொடர்ச்சியாக சப்பிரகமுவ, வயம்ப மற்றும் ஊவா வெலஸ்ஸ பல்கலைக்கழகங்களும் இத்திட்டத்தினூடாக இணைய விருக்கின்றன.

திறந்த பல்கலைக்கழகத்தினை மையப்படுத்தி அதனது வளங்களனைத்தையும் பயன்படுத்தி தொலை தூர திறந்த கல்வி முறை பற்றிய பயிற்சிகள் பல பயிற்சிப்பட்டறைகள் மூலமாக மேற்கூறிய பல்கலைக்கழகங்களில் பணி புரிவோருக்கு 'காமென் வெல்த்' மூலமான கல்வி பயிலுதல் (COL) நிறுவனத்தின் அனுசரணையுடன் அதில் கல்வி பயிலுதலில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி கிருஷ்ணா அலூரி அவர்களின் ஆலோசனையுடன் வாழ்நாள் பேராசிரியர் உமாகுமார சுவாமியால் ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்விடத்தில் கொழும்பிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரினதும் அங்கு பணி புரியும் விரிவுரையாளர்கள், ஊழியர்களினதும் ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது.

***கொழும்பு பல்கலைக்கழகத்தில்...***

இது காலவரையிலும் இரு பல்கலைக்கழகங்களுடன் செயற்திட்டங்கள் தீட்டப்பட்டு அத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றமை இதன் சிறப்பு கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருக்கும் பேராசிரியர் ஷானிகா கிபிருகேகமவின் நிபுணத்துவத்துட




னான தலைமையின் கீழ் பேராசிரியர் உமா குமாரசுவாமியின் ஆலோசனையின்கீழும் 'வெலிகந்த' என்னும் விவசாய கிராமத்தில் கொழும்பு பல்கலைக்கழக்த்தின் கீழான விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திலும் அதற்கு கீழும் கல்வி பயின்ற இளைஞர் யுவதிகளுக்கு வாழையில் இழைய வளர்ப்பு (Tissue culture in banana) என்னும் தொழில் நுட்பம் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களே சுயமாக இழைய வளர்ப்பினூடாக குறுகிய காலத்தில் தரமான வாழைக் கன்றுகளை விருத்தி செய்யும் நிலைக்கு தரமுயர்த்தப்பட்டிருக்கின்றார்கள். கல்வியறிவு கட்டாயம் என்னும் நிலை மாற்றியமைக்கப்பட்டு எவரினாலும் கையாளக்கூடிய தொழில் நுட்பமாக வாழையில் இழைய வளர்ப்பு மாற்றப்பட்டிருக்கின்றது.

இழைய வளர்ப்பு தொழில் நுட்பத்தினூடாக அதிகமான் வாழைக் கன்றுகளை பெறக்கூடியதாக இருப்பதுடன் நோயற்ற அதிகமான விளைச்சலை விரைந்து தரக் கூடிய வாழைகளை உருவாக்குவது வெற்றியளித்திருக்கிறது. அதிலும் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் இலகு தொழில் நுட்பமாக மாற்றியிருப்பது விசேடமான அம்சமாகும். இவ் வகை வாழைகளிலிருந்து பெறப்படும் வாழைக்குலைகள் தரமாக, சிறந்த பார்வையுடன், பொலிவாக, பெரிதாக இருப்பது சிறப்புக்குரியது. இங்கிருந்து பெறப்படும் வாழைக் குலைகள் தர நிர்ணயம் செய்யப்பட்டு ஜப்பான் நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வெறுமனே 8ஆம், 10 ஆம் தரக் கல்வியுடன் வசதியீனம் காரணமாக படிப்பை பாதியிலே இடை நிறுத்தியுள்ள திறமையும் மனவுறுதியும் கொண்ட அக் கிராமத்து இளைஞர் யுவதிகட்கு இவ் வகையான தொழில் நுட்பம் பெரிதும் பயனு டையதாக இருக்கின்றது. தொடர்ச்சியாக வழங்கப்பட்ட பயிற்சிகளினூடாகவும் செயலூக்க பாசறைகளினூடாகவும் இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் பயிற்றுவிக்கப்பட்டு இச் சாதனையைச் செய்கிறார்கள். (தொடரும்)




**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

ஒருவன் அவலப்படும்போது அவனைத் தைரியப் படுத்துவது அவனுக்குச் செய்யும் உதவியில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

~ அயர்லாந்து

வலம்புரி

## மக்கள் அவலத்தில் இருக்கும்போது அதிகாரம் பற்றிச் சிந்திக்க முடியாது

வன்னியில் போர்க்களத்தில் சிக்குண்டுள்ள மக்கள் மிகப்பெரும் அவலத்தைச் சந்தித்துள்ளனர்.

மரணம் மலிந்த மண்ணாக வன்னிப் போர்க்களம் மாறியுள்ளது.

இந்நிலையில் அங்கு சிக்குண்டு உயிரைக் காப்பாற்ற முடியாமல் பரிதவிக்கும் மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதே அவசரமும், அவசியமுமான தேவையாகும்.

எனினும் இது விடயத்தில் சர்வதேச சமூகம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் பாராமுகமாக உள்ளது.

சர்வதேசத்தின் இந்த அசமந்தப் போக்கிற்கு இந்தியாவே அடிப்படைக் காரணம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இலங்கைக்கு அண்டை நாடாக இருக்கக் கூடிய இந்தியாவை மீறி எந்த நாடுகளும் ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட முன்வரமாட்டா என்பது தெரிந்த விடயம்.

போர்க்களத்தில் சிக்குண்டுள்ள மக்களை மீட்பது தொடர்பில் அமெரிக்காவின் திட்டத்தை முறியடிப்பதில் இந்தியா மிக வேகமாகச் செயற்பட்டது.

இலங்கைக்குள் அமெரிக்கா காலடி வைக்குமாயின் அது தனது இறையாண்மைக்கு ஆபத்தானதென இந்தியா கருதியமையால் வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு உதவும் அமெரிக்காவின் திட்டங்கள் முறியடிக்கப்பட்டன.

ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் புகுந்து அந்த நாட்டை அதட்ட முடியாது எனக் கூறிய அமைச்சர் பிரணாப் முகர்ஜி தன்னால் முடியாவிட்டால் அமெரிக்காவின் உதவியையாவது ஈழத்தமிழருக்குக் கிடைக்கச் செய்திருக்கலாம் அல்லவா?

அதைக் கூட தடுத்து நிறுத்துவதில் இந்தியா வெற்றி கண்டுவிட்டது. அமெரிக்காவின் திட்டத்தை முறியடிப்பதில் இந்திய மத்திய அரசு எடுத்த முயற்சியை இலங்கை விவகாரத்தில் எடுத்திருந்தால் எத்தனையோ அப்பாவி மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

ஆக,இந்தியா திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது என்பது தெளிவு.

வன்னிப் போர்க்களத்தில் சிக்குண்டுள்ள மக்களை காப்பாற்றுவதை விடுத்து அதிகாரப் பகிர்வு பற்றி இந்தியா இச் சந்தர்ப்பத்தில் பேசுவது தனது கபடத்தனத்தை எவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடாதென்பதற்காக என்பதையாவது புரிந்து கொள்வது அவசியம்.

# இலங்கை முதலீட்டு சபையின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

## ஜனாதிபதி மஹிந்த பணிப்புரை

(கொழும்பு)

முதலீட்டுச் சபையின் பல தரப்பட்ட திட்டங்களில் நிலவும்



வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடக தகவல் துறை, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுர பிரியர்ஷன யாப்பா மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக பெரேரா ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இலங்கை முதலீட்டுச் சபையின் பல துறைகளில் 7 ஆயிரம் வெற்றிடங் கள் நிலவுவதாக இக் கலந்துரையாடலின் போது ஜனா திப தியின் கவனத்துக்கு கொ ண்டு வரப் பட்டது.

அதனையடுத்த அந்த வெற்றிடங்க ளைநிரப்புவ தற்கு உடன் நடவடிக்கை எடுக் குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(ஓ-5)

# இறக்குமதியாகும் பால்மாக்களில் தீங்கு விளைவிக்கும் கொழுப்பு

## மௌபிம லங்கா மன்றம் புகார்

(கொழும்பு)

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பிரதான 10 வகை பால்மாக்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பிற கொழுப்பு பதார்த்தங்கள் இருப்பதாக மௌபிம லங்கா மன்றம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், மேற்படி 10 வகை பால்மாக்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு எதிராக உணவுச் சட்டம், வரிமோசடி, நுகர்வோர் உரிமை அடிப்படையில் வழக்கு தொடரப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

மௌபிம லங்கா மன்றத்தின் விசேட ஊடகவியலாளர் மாநாடு கடந்த வியாழக்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடை பெற்ற போதே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய மன்றத்தின் தலைவர் ஆரியசீல விக்கிரமநாயக்க கூறுகையில்,

மெலமைன் பிரச்சினைக்கு பின்னர் பால் மாக்களில் உள்ள இரசாயன பதார்த்தங்கள் தொடர்பாக எழுந்ததுடன் , இதனை கவனத்தில் கொண்டு இறக்குமதி செய்யும் பால் மாக்களின் 10 வகைகளை பரிசோதனைக்கு உட்படுத்தினோம்.

இப் பரிசோதனையை இலங்கையில் செய்யப் போதுமான அளவு தொழில் நுட்ப வசதிகள் இல்லாமையால் சர்வதேச அங்கீகாரமுள்ள இங்கிலாந்தின் எக்லிப்ஸ் ஆய்வு மையத்திற்கு அனுப்பியே மேற்படி 10 வகை பால் மாக்களையும் ஆய்வுக்குட்படுத்தினோம்.

இவ் ஆய்வின் முடிவுகள் பெரும் அதிர்ச்சியைத் தரக் கூடிய தரவுகளையே வெளியிட்டிருந்தது. மேற்படி 10 வகை பால்மாக்களிலும் 23 வீதம் பிற கொழுப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது. இப் பிற கொழுப்பு பதார்த்தங்களானது சர்வதேச சந்தையில் கிடைக்கக்கூடிய மிகவும் மலிவான பாம் எண்ணெய், கோழி உட்பட மிருக கொழுப்பு என்பவையாகும்.

பொதுவாக பசுக்களில் இருந்து பெறப்படும் பாலில் இருந்து பிரிக்கப்படும் கொழுப்புக்கு ஈடாகவே பிற கொழுப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்படி சேர்க்கப்பட்ட பிற கொழுப்பு பதார்த்தங்கள் உடல் சுகாதாரத்திற்கு முற்றிலும் தீங்கை விளைவிக்கக் கூடியவை. அத்தியாவசிய பொருட்களின் சட்டத்தின் கீழ் மேற்படி 10 வகையான பால்மாக்களையும் இறக்குமதி செய்வதால் அரசாங்கத்திற்கு ஒரு வருடத்திற்கு 7ஆயிரம் மில்லியன் ரூபா வரிப் பணம் இல்லாமல் போவதுடன் மேற்படி 10 வகை பால் மாக்களை இறக்குமதி செய்வதற்காக பெருந் தொகையான பணத்தையும் செலவிடுகின்றது.

எனவே, இறக்குமதி செய்யப்படும் மேற்படி 10 வகையான பால் மாக்களையும் உடனடியாக தடை செய்வதோடு அவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம்முன் வர வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஓ-5)

# யாழ்ப்பாணத்தில் கலாநிலையம் அமைக்கும் முயற்சியில் உள்ளூர் திரைப்பட துறைசார் முக்கியஸ்தர்கள்

இலங்கையின் முன்னணி திரைப்பட கலைஞர்கள் தாம் மேற் கொள்ளும் தேசிய நல்லிணக்க முயற்சிகளில் உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்கள். வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் மீண்டும் கலாசார உறவுப் பாலத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளில் உதவி செய்வது ஒவ்வொரு இலங்கையரது பொறுப்பாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

விருது வென்ற நடிகை மாலினி பொன்சேகாவின் எண்ணக் கருவிற்கு அமைய யாழ்ப்பாணத்தில் கலாநிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் உள்ளூர் திரைப்பட துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் கை கோர்த்துள்ளார்கள். இந்த கால நிலையத்தின் வடிவம் அமைந்த நகல் வரைபு நேற்று முன்தினம் திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்டது. குறித்த கட்டிடம் , சிறிய திரையரங்கு ,சனசமூக நிலையம், ஒத்திகை மேடை போன்ற வசதிகளை கொண்டதாக அமையும். யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கட்டடக் கலை சிறப்பம்சங்களை உள்ளடக்கியதாக இது நிர்மாணிக்கப்படும். இந்த தேசிய பணிக்கு அரசாங்கம் பல வழிகளிலும் உதவ வந்திருப்பதாக கலைஞர் ரவீந்திர ரந்தெனிய தெரிவித்தார்.குறிப்பாக தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் நிதி ஒதுக் கீடுகளை மேற் கொள் ளும் என அவர் குறிப்பிட்டார். சனத் குணதில அங்கு உரை யாற்றுகையில் எதிர்வரும் 22 ஆம் திகதி திரையரங்குகளில் இருந்து பெறப்படும் வருமானம் கட்டட நிர்மாண முயற்சிகள் சார்ந்த நிதியத்தில் செலுத்தப்படும் என்றார். திரைப்படக் கலைஞர் மாபெரும் கலை நிகழ்ச்சியை நடத்தி நிதி சேகரிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிகின்றது.

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# முன்னேறிச் செல்!



இதனை உண்மையாகவே கற்க விரும்புபவர்கள் உங்களில் யாராவது இருந்தால், அவர் வாழ்க்கையில், மற்ற தொழில்களில் செலுத்தும் அளவு மன உறுதியுடன், ஏன், அதைவிடத் தீவிர உறுதியுடன் தொடங்க வேண்டும். ஒரு தொழிலுக்கு எவ்வளவு கவனம் தேவைப்படுகிறது! அது எவ்வளவு கண்டிப்பாக வேலை வாங்குகிறது! தந்தையோ, தாயோ, மனைவியோ, குழந்தையோ இறப்பதனாலும் தொழில் நிற்க முடியுமா! இதயம் உடைந்து போயிருந்தாலும் தொழில் செய்யும் ஒவ்வொரு மணி நேரமும் தாங்க முடியாத வேதனை தரும்போது, நாம் தொழில் நியாயமானது, அது சரி என்று தானே நாம் கருதுகிறோம். எந்த தொழிலுக்கும் எக் காலத்திலும் தேவையாக இருப்பதை விட அதிக உழைப்பு இந்தச் சாஸ்திரத்திற்குத் தேவை. தொழிலில் பலர் வெற்றி பெறலாம்; இதிலோ மிகமிகச் சிலரே வெற்றி பெறுவர். ஏனெனில் கற்பவரின் தனியியல்பு இதில் ஒரு முக்கிய காரணம். தொழிலில் எல்லோரும் பணம் குவிக்காமல் இருந்தாலும் ஒவ்வொருவரும் ஏதோ சேர்க்க முடியும். அது போல் இதைக் கற்பவர்களுக்கும் ஒரு கணமாவது காட்சி கிடைக்கும் அதனால் இதன் உண்மையைப் பற்றியும் இதனை முழுவதும் உணர்ந்த மனிதர்கள் இருந்தனர். என்பதைப்பற்றியும் அவர்க ளுக்கு உறுதியான தீர்மானம் உண்டாகும்.

# இந்திய வைத்தியக் குழுவின் வருகை ; இலங்கை மீதான ஆக்கிரமிப்பின் ஆரம்பம்

## இலங்கை அரச வைத்தியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தால் காயமடையும் வன்னிப் பிரதேச மக்களுக்கு சிகிச்சையளிக்கவெனக் கூறிக்கொண்டு புல்மோட்டையில் இந்திய வைத்திய முகாம் அமைத்துள்ளமை பல சந்தேகங்களை எழும்பியுள்ளதென அகில இலங்கை அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது. புல்மோட்டையில் ஏற்கனவே இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான வைத்தியசாலை ஒன்று இருக்கும் பொழுது ஏன் வேறொரு வைத்தியசாலையை அமைக்க வேண்டம். இந்திய வைத்தியர்கள் புல்மோட்டை அரச வைத்தியசாலையின் ஊடாக ஏன் சேவையாற்ற முடியாது. இந்தியா மெதுவாக இலங்கையை தமது ஆக்கிரமிப்புக்குக் கொண்டு வருகிறது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

புல்மோட்டையில் அமைக்கப்பெற்ற இந்தியாவின் வைத்தியசாலை தொடர்பாக நேற்று முன்தினம் விளக்கமளிக்கையிலேயே அகில இலங்கை அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் பாக்டர் கிஷாந்த தசநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் அறிவிப்பின் படி இன்னும் 35 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பே புலிகள் வசம் உள்ளது. சுமார் 30 ஆண்டு கால யுத்தம் முடிவடையும் தறுவாயில் உள்ளது என அரசாங்கம் பெதுமக்களுக்கு அறிவிக்கும் போது இறுதிப் பணியை செய்வதற்கு இந்தியாவின் மருத்துவ குழுவை இலங்கைக்கு அழைத்துள்ளமை மீள முடியாத இன்னுமொரு பிரச்சினையின் ஆரம்பமே யாகும்.

புல்மோட்டையில் அமைக்கப்பட்ட இந்தியாவின் வைத்தியசாலையை சுகாதார அமைச்சோ, இலங்கை வைத்தியர்களோ தலையிட முடியாதவாறு சுயமாக இயங்கவிட்டமை அரசாங்கம் செய்த பாரிய குற்றமாகும்.

இலங்கையில் 13 ஆயிரத்திற்கும் அதிகமான வைத்தியர்கள் இருக்கும்போது இந்திய வைத்தியர்களை இலங்கையில் சேவையாற்ற அழைத்தமையானது உள்நாட்டு வைத்தியர்களை இழிவுபடுத்தும் செயலாகவே அமைகின்றது.

மருத்துவ துறையில் நடைபெறும் இவ்வாறான மன்னிக்க முடியாத குற்றங்களுக்கு எதிராக, தொழில் சங்க நடவடிக்கை எடுக்க முடியாதவாறு அரசாங்கம் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டுகின்றது. இந்திய அரசாங்கத்தின் இலங்கை மீதான ஆக்கிரமிப்புக்கான தலையீட்டுக்கு இலங்கை அரசாங்கம் வீண் வழியமைத்துக் கொடுக்கின்றது.

அகில இலங்கை அரசாங்க வைத்திய உத்தியோகத்தர் சங்கம் என்ற வகையில் புல்மோட்டையில் இந்தியாவின் வைத்தியசாலையை அமைத்து சுயமாக செயல்பட அனுமதித்தமையை வன்மையாக எதிர்க்கின்றோம். இந்தியாவின் உள் நோக்கங்களை புரிந்துகொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அரசாங்கமும் செயல்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஓ-5)

## கருணா குழு ஆயுதந்தரித்திருப்பது ஆபத்தான விடயமல்ல - அரசு தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து வடக்கு கிழக்கு முழுமையாக விடுவிக்கப்படும் வரையில் கருணா குழுவினரோ அல்லது வேறு ஆயுதக் குழுக்களோ ஆயுதந்தரித் திருப்பது ஆபத்தானதல்ல என ஊடகத் துறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கொண்டிருந்த போதும், தேர்தல் நோக்கங்களுக்காக ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்தவில்லை எனவும் இதனால் சில குழுக்கள் ஆயுதங்களை கொண்டிருப்பது பாரிய பிரச்சினை அல்ல எனவும் அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். (ஓ-5)

## வெள்ளவத்தையில் கடத்தப்பட்ட தமிழ் ஆசிரியை விடுவிப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தையில் வைத்து கடந்த 10 ஆம் திகதி வெள்ளை வானில் வந்த இனந் தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட தமிழ் ஆசிரியை நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள் ளது.

கொழும்பு இராஜகிரிய றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்பித்து வரும் கணபதிப்பிள்ளை கேதீஸ்வரி (வயது 30) என்ற ஆசிரியையே இனந்தெரியாதோரினால் இவ்வாறு கடத்தப்பட்டு நேற்றிரவு விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெள்ளைவத்தை பசல்ஸ் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு வெள்ளை நிற வானில் வந்த ஆயுததாரிகள் குறித்த ஆசிரியையை பலவந்தமாகக் கடத்திச் சென்றதாக அவரது உறவினர்கள் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந் தனர்.

இந்நிலையில் அவர் நேற்றிரவு விடுவிக்கப்பட்டதாக அவரது உறவினர்கள் தங்களுக்கு தெரிவித்ததாக ஜனநாயக மக்கள் முன்னணியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் குமரகுருபரன் தெரிவித்தார். (ஓ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 03 1933



உதிர்வு 12 02 2009

### அமரர் கந்தையா பரமசாமி

(பிரதம லிகிதர் -அப்பர் பலாங்கொடை தேயிலைத் தோட்டம்)

கடந்த 12.02.2009 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் *க.பரமசாமி அவர்களின்* வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (14.03.2009) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் குடியிருப்பு
107 ,கச்சாய். வீதி ,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
ப.பரணி
(H.N.B -சுன்னாகம்)

(2252/இ-10)

சிவமயம்



வலி. கிழக்கு (தென்பகுதி) ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கியின் நீர்வேலிக் கிளை முகாமையாளராகச் சேவையாற்றி அகவை அறுபதையெய்தி பணியோய்வு பெற்றவரும், நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபை பொருளாளரும், நீர்வேலி ஸ்ரீ கணேச முன்பள்ளி, நீர்வேலி ஸ்ரீ கணேச சனசமூக நிலையம் ஆகியவற்றின் தலைவருமாகிய

### உயர்திரு ச.க.முருகையா அவர்களின்

சமய, சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக
நடைபெறும்

### சேவைநலம் பாராட்டு விழாவும் "திருப்பணிச் செம்மல்" விருது வழங்கலும்

காலம் :- 15.03.2009 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பிற்பகல் 1.30 மணி
இடம் :- ஸ்ரீ கணேச முன்பள்ளி மண்டபம், நீர்வேலி.

*தலைவர்*
சிவஸ்ரீ கு. தியாகராசக் குருக்கள் (நீர்வைமணி) அவர்கள்
(தலைவர், ஸ்ரீ கணேச அறநெறிப்பாடசாலை, நீர்வேலி).

*பிரதம விருந்தினர்*
திரு. க. ஆனந்தராசா அவர்கள்
(வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**வாழ்த்துரை வழங்குவோர்**

திரு.த.ந. பஞ்சாட்சரம் அவர்கள்
*(இளைப்பாறிய ஆசிரியர்)*
திரு.த.நடராசா அவர்கள்
*(செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை)*
திரு.துரை எங்கரசு அவர்கள்
*(கோட்டக்கல்வி அலுவலர், சங்கானை, கல்விக்கோட்டம்)*
திரு.வே. சந்திரகேசரம்பிள்ளை அவர்கள்
*(இளைப்பாறிய அதிபர்)*
திரு.சு.மகேந்திரன் அவர்கள்
*(நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்)*
திரு.நா.சுந்தரலிங்கம் அவர்கள்
*வலி.கிழக்கு (தென்பகுதிப.நோ.கூ. சங்கம், நீர்வேலி)*
திரு.க. சிவலிங்கம் அவர்கள்
*(பொது முகாமையாளர், வலி.கிழக்கு (தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி)*
திருமதி. ருக்மணி ஆனந்தவேல் அவர்கள்
*(தலைவர், மாதர் சங்கம், நீர்வேலி)*
திரு.ச.லலீசன் அவர்கள்
*(அதிபர்,யா/ கோப்பாய் தெற்கு, றோ.க.த.க பாடசாலை)*
திரு.சு. சண்முகவடிவேல் அவர்கள்
*(கிராம அலுவலர், நீர்வேலி தெற்கு)*
திரு.க.மகாலிங்கம் அவர்கள்
*(பரிபாலனசபை உறுப்பினர், அரசகேசரிப் பிள்ளையார் கோவில்)*
திரு.த.பரராசசிங்கம் அவர்கள்
*(சமாதான நீதிவான், நீர்வேலி)*
திரு.ஆ. தர்மலிங்கம் அவர்கள்
*(ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர் )*
திரு.சி.திருநாவுக்கரசு அவர்கள்
*(காசாளர் வலி.கிழக்கு (தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)*

**நிகழ்ச்சி நிரல்**

- விழா நாயகரை மங்கள இசையுடன் அரசகேசரி விநாயகர் ஆலயத்திலிருந்து மண்டபத்திற்கு அழைத்து வருதல்.
- மங்கள விளக்கேற்றல்.
- இறை வழிபாடு.
- வரவேற்புரை :- திரு.ச.சந்திரசூடி அவர்கள் *(செயலாளர்,அரசகேசரி விநாயகர் ஆலய பரிபாலனசபை, நீர்வேலி)*
- ஆசியுரை :-
  (சிவஸ்ரீ.சா.சோமதேவக் குருக்கள் அவர்கள் *(அரசகேசரி விநாயகர் ஆலயம், நீர்வேலி)*
  சிவஸ்ரீ.அ.சந்திரசேகரக் குருக்கள் அவர்கள் *(வாய்காற்றரவை விநாயகர் ஆலயம், நீர்வேலி)*
  சிவஸ்ரீ.ஆ.சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் *(வாய்க்காற்றரவை விநாயகர் ஆலயம், நீர்வேலி)*
  சிவஸ்ரீ.சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் அவர்கள் *(கந்தசுவாமிகோவில், நீர்வேலி)*
  சிவஸ்ரீ. கு. சிதம்பரேஸ்வர சர்மா அவர்கள் *(சிவகாமி அம்மன் ஆலயம், அச்செழு)*
- தலைமையுரை
- வாழ்த்துரைகள்
- பாராட்டுரைகள் :- "திருப்பணிச் செம்மல்" விருது வழங்கலும் கௌரவித்தலும்.
- ஏற்புரை
- நன்றியுரை :- திரு.க.ந. ஜெயகிருஸ்ணன் *(செயலாளர், ஸ்ரீ கணேச சனசமூக நிலையம், நீர்வேலி).*

அனைவரும் வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

விழாச்சபையினர்.
நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில்,
ஸ்ரீ கணேச சனசமூக நிலையம்,
ஸ்ரீ கணேச முன்பள்ளி.
ஸ்ரீகணேச அறநெறிப்பாடசாலை
சமூகத்தினர் , நலன்விரும்பிகள்

10.03.2009
நீர்வேலி.

(2396)

# ஆஸி. ஜாம்பவான் பிரட்மனுக்கு நிகரானவர் சச்சின் டெண்டுல்கர்

## ஜோன் ரைட் புகழாரம்




கிரிக்கெட் அரங்கில் அவுஸ்திரேலிய ஜாம்பவான் டொன் பிரட்மெனுக்கு நிகரானவர் சச்சின் என புகழாரம் சூட்டியுள்ளார் முன்னாள் இந்திய அணி பயிற்சியாளர் ஜோன் ரைட்.

இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் (2000-2005) ஜோன் ரைட். இருபது ஆண்டுகளுக்கு மேலாக கிரிக்கெட் அரங்கில் அசத்தி வரும் இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சினை ஜோன் ரைட் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, அவுஸ்திரேலிய ஜாம்பவான் டொன் பிரட்மெனுக்கு ஒப்பானவர் சச்சின். இருவருமே துடுப்பாட்ட நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்தவர்கள்.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சினின் ஆட்டம் தற்போதும் பிரமிக்க வைக்கிறது. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளிலும் சேர்த்து நூறு சதம் கடக்கக்கூடியதகுதிசச்சினுக்குஉண்டு.



சச்சின் எதிர்வரும் 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பையில் கட்டாயம் பங்கேற்க வேண்டும்.

இந்திய துணைக்கண்டத்தில் நடக்கும் இத் தொடரில் அவரது அனுபவம் அணிக்கு பக்கபலமாக அமையும்.

**சிறந்த பயிற்சியாளர்**

இந்திய பயிற்சியாளர் கிறிஸ்டனின் செயற்பாடு சிறப்பாகவுள்ளது. பயிற்சியாளருக்கான தேர்வில் என்னைவிட அவருக்கு அதிக புள்ளிகள் கொடுக்கலாம்.

அணியின் தேவைக்கேற்ப முக்கியத்துவத்தை உணர்ந்து பயிற்சியளிக்கிறார். அவருடன் இணைந்து றொபின்சிங் (களத்தடுப்பு பயிற்சியாளர்), வெங்கடேஷ் பிரசாத் (பந்து வீச்சு பயிற்சியாளர்) தங்களது பணியை பொறுப்புடன் செய்து வருகின்ற னர்.

**நல்ல முன்னேற்றம்**

தோனி தலைமையிலான இந்திய அணிக்கு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தைப் பெறுவதற்கு அனைத்து தகுதியும் உள்ளது. லேசான ஆட்டம் கண்ட அவுஸ்திரேலியா தற்போது மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது.

# நியூசிலாந்து-இந்தியா இன்று இறுதி ஒருநாள் போட்டியில் மோதல்



(ஹமில்டன்)

நியூசிலாந்து சென்றுள்ள தோனி தலைமையிலான இந்திய அணி இரண்டு இருபது-20, ஐந்து ஒருநாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடி வருகிறது.

இருபது -20 தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது. ஒரு நாள் தொடரில் நான்கு போட்டிகளின் முடிபில் இந்தியா 3:0 என்ற கணக்கில் தொடரை வென்று முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் மோதும் ஐந்தாவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி அக்லாந்தில்இன்று நடைபெறுகிறது.

இதில் ஆறுதல் வெற்றிபெற நியூசிலாந்து அணிபயிற்சிமேற்கொண்டு வருகிறது.

முதன் முறையாக நியூ சிலாந்து மண்ணில்ஒருநாள்தொடரைவென்ற இந்திய அணி துடுப்பாட் டத்தில் பலத்துடன் உள்ளதால் இப் போட் டியிலும் வெற்றிபெற தயாராக உள்ளது .

இரு அணிகளும் வெற்றியை நோக்கி களமிறங்குவதால் போட்டியின்விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஏழு மாதங்களின் பின் டென்னிஸ் அரங்கில் ஷரபோவா




ரஷ்யாவின் முன்னாள் முதல் நிலைவீராங்கனைமரியா ஷரபோவா 7 மாத இடைவெளிக்கு பின்னர் மீண்டும் களமிறங்கினார். இன்டியானா வேல்ஸில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ஷரபோவா சக நாட்டு வீராங்கனை எலேனா வென்சினினாவுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் களமிறங்கினார்.

எனினும் அவர் இரட்டையர் பிரிவில் முதல் சுற்றிலேயே தோல் வியடைந்துவெளியேறினார்.

இதேவேளை இத்தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.

உக்ரைனின் மரியா கெரிட்சேவாவை சந்தித்த அவர் 2:6,6:3, 6:2 என்ற செட் கணக்கில் போராடி வெற்றி பெற்றார்.

# தென்னாபிரிக்க அணியின் புதிய தலைவராக கலிஸ்



(கேப்டவுண்)

மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கு தென்னாபிரிக்க அணியின் தலைவராக ஜக்கலிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

முதலிரண்டு போட்டிகளில் வென்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 2:0 என தனதாக்கியது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் கேட்டவுணில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

வலது கை விரலில் காயம் அடைந்த நிலையில் தொடரிலிருந்து விலகிய சிமித்துக்கு பதிலாக புதிய அணித் தலைவராக கலிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுதவிர இந்திய வம்சாவளி வீரரான இம்ரான்கான் புதுமுகமாக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 33





இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலாவது போட்டி 1995ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி கிறிஸ்சேர்ச்சில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்கா முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை யிழந்து 271 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களைக் கொடுத்து அணித்தலைவர் ருதேர்போர்ட்டை (65) வெளியேற்றி ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 272 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 238 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் முரளிதரன் 9 பந்துகளில் ஒரு பவுண்டரி உட்பட 8 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். இந்நிலையில் இரண்டாவது ஒருநாள் போட்டி 1995ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி ஹமில்டனில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 280 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 62 ஓட்டங்களைக் கொடுத்து அணித் தலைவர் ருதேர்போர்ட்டை (34) ஆட்டமிழப்[illegible] பாலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

தொடர்ந்து மழையின் குறுக்கீட்டால் இலங்கை அணிக்கு வெற்றி இலக்காக 31 ஓவர்களில் 174 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 31 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை யிழந்து 117 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதன் மூலம் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இலங்கை அணி ஒருநாள் தொடரையிழந்தது.


இந்நிலையில் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி அக்லாண்டில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டையிழந்து 250 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு 50 ஓவர்களில் 251 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 199 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து கிறேற்பாற்சை (43) ஆட்டமிழப்பு செய்து ஒரு விக்கெட்டை சாய்த்தார்.


(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-38



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

## நேற்றைய பகுதிக்கான விடை



புதுமாத்தளன் பகுதி மீது நேற்று மாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் மத்தியில் உறவினர்கள்.



# வான் மற்றும் ஷெல் தாக்குதல்...

க.கனகநாதன் (வயது 47), யோ.கோபிநாத் (வயது 27), ஈ.சிலம்பரசன் (வயது 20), க.கௌதம் (வயது 6), க.கேதீஸ்வரி (வயது 46) ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி சென்று பார்வையிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கரைக்குச் சென்றபோது மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவ் ஆர்ப்பாட்டத்தின் போது எறிகணைத் தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் மற்றும் பச்சைபுல்மோட்டை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் சோ.சிந்துஜன் (வயது 14), சோ.சுகன்யா (வயது 20), அ.அனெக்ஸ் கிங்ஸ்ரன் (வயது 36), பே.இந்திரன் (வயது 26), சி.மனோரஞ்சிதம் (வயது 28), சி.நாகேஸ்வரி (வயது 49), சி.கமலகாந்தன் (வயது 35), இ.பிரியதர்சினி (வயது 16), க.கனநாதன் (வயது 45), நோ.இந்திராணி (வயது 58), ப.நவரத்தினராசா (வயது50), அ.இராஜேஸ்வரி (வயது 18), இ.சுதர்சினி (வயது 15), ரவிநாத் (பத்துமாதம்), ப.பரமேஸ்வரி (வயது 30), சு.ருக்குமணி (வயது 66), த.சரண்யா (வயது 8), செ.லக்ஸனா (வயது 4), வி.பிரதீபன் (வயது 4) ஆகியோர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரிழந்ததாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அம்பலவன் பொக்கணை மற்றும் பச்சைபுல்மோட்டை பகுதியில் விமானப்படையினர் நேற்று முன்தினம் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதில் இரண்டுபேர் உயிரிழந்துள்ளதுடன் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர்.

சி.ரத்தினம் (வயது 70), ந.கபில்ராஜ் (வயது 15) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை மாத்தளன் மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்படவேண்டிய ஐந்து பொதுமக்கள் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ந.யோகேஸ்வரன் (வயது 22), ஐ.கணபதி (வயது 68), சோ.சிந்துஷா (வயது 17) ஆகியோர் உயிரிழந்துள்ளனர். ஏனைய இருவரின் பெயர் விபரம் வெளிவரவில்லை.

இதேவேளை மாத்தளன் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் 25 பேர் உயிரிழந்துள்ளதாக வன்னி அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியிருந்தன. (ஏ-5)

# தாதியர்...

பட்டுள்ளனர். இந்த தொண்டர் தாதியர் குழு திருகோண மலை நோக்கி புறப்படுவதற்கு முன்னர் நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ அபய ராமவிகாரையில் மத வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

மோதல்கள் காரணமாக பாதிக்கப்பட்டு வவுனியா மற்றும் திருகோணமலை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்குத் தேவையான சிகிச்சை நடவடிக்கைகளில் இந்தத் தாதியர் குழு ஈடுபடவுள்ளது. (ஏ-3)

# புதுமாத்தளன் வைத்தியசாலை...

நேற்று சுமார் 3 மணியளவில் நடத்தப்பட்ட ஆட்லெறித் தாக்குதலின் போது சர்வதேச செஞ்சிலுவை சங்கக் கப்பலில் உணவுப் பொருட்களை இறக்கி களஞ்சியப்படுத்தும் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டிருந்த 7 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 32 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பு வலய பகுதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் மொத்தமாக 31 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தமிழ்நெற் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த எறிகணைத் தாக்குதல்கள் வலைஞர்மடம், இரட்டை வாய்க்கால், முள்ளிவாய்க்கால் மற்றும் மாத்தளன் ஆகிய பகுதிகளின் மீதே நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை விமானப்படையின் இரண்டு போர் விமானங்கள் நீரேரி பகுதியில் 24 குண்டுகளை வீசியுள்ளன. இதன் போது ஏற்பட்ட சேத விபரங்கள் வெளியாகவில்லை. (ச-5)

# பிரி.நிழல் பாதுகாப்...

வீரதுங்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்த இவர் எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதோடு இன்று நாடு திரும்புவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது:

இன்று சனிக்கிழமை வரை தங்கியிருக்கும் லியம் பொக்ஸ், தற்போது நடைபெற்றுவரும் மோதல்கள் தொடர்பான தனது கருத்துக்களை ஊடகங்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வார் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

1997ஆம் ஆண்டு காலகட்டப் பகுதியில் சந்திரிகா அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கான திட்டங்களை இவர் முன்வைத்திருந்ததும், அண்மையில் இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியை பிரித்தானியா நியமித்ததை இவர் கடுமையாக விமர்சித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பொதுமக்களின்...

தூதுவர் நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

மோதல்களின்போது பொதுமக்களுக்கு ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிர்ச்சி தருகிறது. தற்போதைய நிலை நீடித்தால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை பேரழிவு நிலையை எட்டலாம் என்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களை பாதுகாப்பதற்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்கள் மீது படையினர் மீண்டும் மீண்டும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதாக குற்றம்சாட்டியுள்ள அவர், விடுதலைப் புலிகள் பொதுமக்களை கேடயங்களாக பயன்படுத்துவதாகவும் தப்ப முயன்றவர்களை சுடுவதாகவும் வெளியான செய்திகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளால் இவ்வாறு பொதுமக்கள் நடத்தப்படுவது கண்டனத்துக்குரியது என்றும் இது போர்க்காலக் குற்றமா என ஆராயப்படவேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பகமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்குமிடத்து கடந்த இரண்டு மாதத்தில் 2 ஆயிரத்து 800க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 ஆயிரம்பேருக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது என்று அவரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகளுக்கான அமைச்சர் மகிந்த சமரசிங்க பொதுமக்களின் பாதிப்பு பற்றி ஆதாரமற்ற உறுதிப்படுத்தப்படாதபுள்ளி விபரங்களை ஐக்கிய நாடுகள் சபை பயன்படுத்துவது ஆச்சரியமாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த ஐ.நா.அறிக்கை குறித்து விடுதலைப் புலிகள் தரப்புக் கருத்துக்கள் வெளியிடப்படவில்லை. (ச-14)

# அமைச்சர் முரளிதரன்...

அதிகாலை ஆயுதங்களுடன் திடீரென அலுவலகத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அங்கிருந்த நால்வரும் கொல்லப்பட்டுள்ளனர்.

சொறிக்கல்முனை 6ஆம் கட்டையிலுள்ள இவ் அலுவலகம் ஏற்கனவே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அலுவலகமாகச் செயல்பட்டு வந்ததாகவும் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அண்மையில் இணைந்து கொண்ட பின்பு அவரது அலுவலகமாக செயற்பட்டதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சம்மாந்துறை பகுதியில் முரளிதரன் எம்.பியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகம் மீது நேற்று அதிகாலை தாங்கள் தாக்குதல் நடத்தியதாகவும்,

நேற்று அதிகாலை 2.50 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் ரி-56 ரக துப்பாக்கிகள் மூன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் என புதினம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஏ-5)


## பாராட்டி

## வாழ்த்துகின்றோம்



17-வது ஆண்டு நிறைவைக் காணும் எமது சாவகச்சேரி நாற்சதுர சுவிசேஷ சபையினரையும், தமது திருமண வாழ்வில் 25-வது ஆண்டை நிறைவு செய்யும் தேவ ஊழியர் வண. N.Y. தேவபாலன், அவரது துணைவியார் சகோ. T. சாந்தி அவர்களையும்

நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

நாற்சதுர சுவிசேஷ சபை
நல்லூர், யாழ்ப்பாணம்.

(2395)


# ஜனாதிபதி மகிந்த -ஹிலாரி...

இலங்கை தற்போது பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் விளிம்பில் நிற்பதாக ஒப்புக்கொண்ட அமெரிக்க அரசு துறைச் செயலர் ஹிலாரி கிளின்டன், இது இலங்கையில் அமைதியை மீள நிலைநாட்டி மறுகட்டமைப்பு மற்றும் புனர்வாழ்விற்கு வழி வகுக்கும் ஒரு பெரும் சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமைந்துள்ளதென தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமாலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியபோதே அவர் இந்தக் கருத்துக்களை தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அக்குரசவில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து தனது அனுதாபத்தைத் தெரிவிக்கும் பொருட்டே ஹிலாரி கிளின்டன் இந்த தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து கருத்து வெளியிட்ட ஹிலாரி கிளின்டன், இராணுவத்தினால் பொதுமக்கள் யாரும் தாக்கப்படமாட்டார்கள் என பாதுகாப்புச் செயலர் உறுதியளித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஹிலாரி கிளின்டனின் கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போது விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மிகச் சிறிய பகுதியில் சுமார் 50 ஆயிரம் முதல் 70 ஆயிரம் வரையிலான மக்கள் இருக்கிறார்கள்.

அங்கிருந்து மக்கள் வெளியேறி விடாமல் விடுதலைப்புலிகள் தடுத்து வருகிறார்கள். விடுதலைப்புலிகளைஅந்தப் பகுதியில் இருந்து அடுத்த சில நாட்களில் அகற்றி விடமுடியும் என அரசு நம்புகிறது.

விடுதலைப்புலிகளிடமிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்துள்ள மக்கள் நலன்புரிக் கிராமங்களில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள பகுதிகளுக்கும் கூட அரசு, செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக உணவுத்திட்டத்தின் மூலமாக உணவு வழங்கி வருகிறது எனக் கூறியுள்ளார்.

இந்தப் பகுதியில் மோதல் முடிவுக்கு வந்தவுடன் வடக்கே மறுகட்டமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகும் அரசியல் தீர்வு வழிமுறையும் அனைத்துக் கட்சிக்குழு நடவடிக்கைகள் மூலம் தொடங்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திற்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு தயாராக இருக்கிறது. வடக்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் இணைந்து செயற்படவும் தான் தயாராக இருக்கிறேன் என்று ஹிலாரி கிளின்டனிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5,14)


## தொழிற் பயிற்சிகள்

*Mobile phone Repairing
Hard ware Hard ware Repairing
Soft ware Phone Lock காலம்:- 2 மாதம்
*ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
Radio, CD player, DVD, Television, AMP, UPS
ஆகியன திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதம்
*ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதம்
பயிற்சி ஆரம்பம்:- 15.03.2009 -16.03.2009

JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:-6434, 0718561654

(C-2195)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.